# பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு














## செயலாற்றுகை அறிக்கை - 2017

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி
அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை – 2017

# உள்ளடக்கம்

பக்க இல.


கௌரவ பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரின் ஆசிச் செய்தி v

கௌரவ பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சரின் ஆசிச் செய்தி ix

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வழங்கிய அறிமுகக் குறிப்பு xi

1. கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் 01
2. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் 09
3. பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் 12
4. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள் 17
5. உட்கட்டுமான அபிவிருத்திகள் 25
6. பெற்றோலிய அகழ்வுகள் மற்றும் அபிவிருத்திகள் 30
7. கழிவு பிளாஸ்டிக்கை எரிபொருளாக மாற்றம் செய்தல் 33
8. உள்நாட்டு சந்தை விலை நகர்வுகள் 35
9. நிறுவன நிர்வாகம் 39
10. கணக்குகள் 54

# கொளரவ பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரின் ஆசிச் செய்தி



பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழ்வரும் நிறுவனங்களான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் மற்றும் வரையறுக்கப்பட்ட பொலிப்டோ தனியார் நிறுவனம் போன்றவற்றால் மேற்கொண்ட செயற்பாடுகளை “செயலாற்றுகை அறிக்கை- 2017” என்னும் தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.இவ் அறிக்கையில் 2017ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் அமைச்சும் அதன் கீழ் வரும் நிறுவனங்களும் நாட்டிற்கு பெற்றோலியப் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் மேற்கொண்ட அனைத்து திட்டங்களும் விபரிக்கப்படுகின்றன.

நாட்டின் தடங்கலில்லாத பெற்றோலிய வழங்கல் தேவையை பூர்த்தி செய்வதற்காக 2017ம் ஆண்டில் மேல் நிலை மற்றும் கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எண்ணி நான் பெருமிதமடைகின்றேன்.எனது அமைச்சு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்துடன் இணைந்து இயற்கை வாயுவுக்கான தேசியக் கொள்கையை உருவாக்கியுள்ளதுடன் இவ் இயற்கை வாயுவை இலங்கை அரசு சக்தி தேவைக்காக உபயோகிப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளது.இலங்கையில் அகழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபடும் முதலீட்டாளருக்கு, இக் கொள்கை ஆபத்தினை குறைப்பதாக உள்ளதோடு மிக முக்கியமானதொன்றாகவும் காணப்படுகின்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எனது அமைச்சின் வழிகாட்டுதல்கள் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக்கேற்ப வெளிப்படைத் தன்மையுடன் பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.பெற்றோலியப் பொருட்களுக்கான களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்காக இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையத்தால் கொலன்னாவையில் 15,000 கன மீற்றர் களஞ்சியத் திறன் கொண்ட தாங்கியை நிறுவுவதற்கான ஒப்பந்தம், வழங்கப்பட்டுள்ளது.மேலும் 15,000 கன மீற்றர் களஞ்சியத் திறன் கொண்ட மூன்று தாங்கிகள்,7,000 கன மீற்றர் களஞ்சியத் திறன் கொண்ட இரு தாங்கிகள் மற்றும் 5,000 கன மீற்றர் களஞ்சியத் திறன் கொண்ட ஒரு தாங்கியையும் நிறுவுவதற்கு 2018ம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், US$ 51.5 மில்லியன் மொத்தச் செலவில் பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எரிபொருட் குழாய்த் தொகுதியையும் எரிபொருள் நிரப்பு முனையத்தையும் மேம்படுத்தி விரிவுபடுத்துதல் திட்டத்தை முன்னெடுத்துள்ளதுடன் இத் திட்டம் பல்வேறு காரணங்களால் நீண்ட காலமாக தாமடைந்து காணப்பட்டது.இத்திட்டத்தின் உயர் தரத்தினை உறுதிசெய்யுமுகமாக விமான எரிபொருள் களஞ்சியத் தாங்கியில் வடிகட்டல் முறைமை நிறுவப்பட்டுள்ளது.மேலும் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாட்டு சிரமங்கள் மற்றும் இயந்திரங்களில் ஏற்படும் பிரதானமான ஆபத்துக்களைக் குறைத்து, குறைந்த தொழிநுட்ப வசதிகளுடன் இலாபத்தை அதிகரிக்கச் செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மசகு எண்ணெய் வடிகட்டல் பகுதி,வாயு எண்ணெய் ஹைட்ரோ- ட்ரீட்டர் பகுதி, Reactor மற்றும் Platformer பகுதிகளை மாற்றீடு செய்யுமுகமாக முகப்பு பொறியியல் வரைபை (Front End Engineering Design) செயற்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மேலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரட்டப்பட்ட நட்டத்தை மாற்றுமுகமாகவும் அதன் நிதித் திறனை வலுப்படுத்துமுகமாகவும் பல்வேறு இலாப நோக்கம் கொண்ட வியாபார முறைமைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனக்கு உண்மையான ஆதரவினை நல்கிய அமைச்சின் பிரதி அமைச்சர், செயலாளர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனைய இதர அதிகாரிகள், தலைவர்கள் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலக பணிப்பாளர் நாயகம் மற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிப்டோ லங்கா தனியார் நிறுவன உத்தியோகத்தர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதோடு இவர்கள் எல்லோரும் இணைந்து எனது அமைச்சின் 2017ம் ஆண்டு செயலாற்றுகைக்காக திறமையாகவும் செயலூக்கத்துடனும் உழைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அர்ஜுன ரணதுங்க, பா.உ**
**பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர**

# கௌரவ.பெற்றோலிய வளங்கள் பிரதி அமைச்சரின் ஆசிச் செய்தி



பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் ''செயலாற்றுகை அறிக்கை - 2017'' என்னும் தலைப்பிடப்பட்ட செய்திகள் அடங்கிய பிரசுரத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்

சனத்தொகை வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி காரணமாக பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி வருடாந்தம் கிட்டத்தட்ட 6% மாக அதிகரித்துச் செல்லுகின்றது.அதிகரித்துவரும் பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்விக்கேற்ப இதற்கு நம்பகமானதும் குறைந்தவிலையிலும் நுகர்வோருக்கு பெற்றோலியப் பொருட்களுகளை வழங்குவதற்கு கீழ்நிலை மற்றும் மேல்நிலை பெற்றோலியத் தொழிற்துறையில் கொள்கைகளை உருவாக்கும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சும் அதன் கீழ்வரும் நிறுவனங்னளும் ஒன்றிணைந்து பல முக்கிய கொள்கைகள் ,நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை வகுத்துள்ளது.

பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எரிபொருட் குழாய்த் தொகுதியையும் எரிபொருள் நிரப்பு முனையத்தையும் மேம்படுத்தி விரிவுபடுத்துதல், முதுராஜவலயிலிருந்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் வரைக்குமான ஜெட் A-1 பரிமாற்றல் குழாய்த் தொகுதிகளையும் அதனுடன் தொடர்புடைய வசதிகளையும் கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதையுடன் இணைந்த வகையில் நிர்மாணிப்பது,கொழும்புத்துறைமுகத்திலிருந்து கொலன்னாவை வரையான எரிபொருள் பரிமாற்றக் குழாய் அமைத்தல், முதுராஜவல, கொலன்னாவை மற்றும் சப்புகஸ்கந்தை முனையம் இணைந்த வகையில் எரிபொருள் பரிமாற்றக் குழாய் அமைத்தல்,எரிபொருள் களஞ்சியத்தை அதிகரித்தல்,உராய்வு நீக்கி எண்ணெய் கலவை செய்யும் இயந்திரத்தை நிறுவுதல் மற்றும் நாடு பூராகவும் உள்ள பிராந்திய மொத்தக் களஞ்சியசாலையிலிருந்து நுகர்வோருக்கு பொருத்தமான சேவையினை வழங்குதல் போன்றன இதில் அடங்கியுள்ள சிறப்பம்சங்களாகும்.

நிறுவனச் செயற்பாடுகளை வலுவூட்டுதல்,மனித வளம்,நிதிச் செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள கால தாமதம் போன்றவற்றினை நிவர்த்தி செய்து,இவற்றை செயற்திறனுடனும் வினைத்திறனுடனும் அமுல்படுத்துவதற்கு பலவேறு செயறதிறன் வாய்ந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. பெற்றோலிய தொழிற்துறைக்கு தனது அர்ப்பணிப்பு சேவைகள் மூலம் சிறந்த பங்காற்றியுள்ள பெற்றோலிய வளங்கள் அமைச்சரான கௌரவ.அர்ஜுன ரணதுங்க அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன்.அத்துடன் அமைச்சின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் இவ் அமைச்சோடு இணைந்த நிறுவனங்களான, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட பெற்றோலிய களஞ்சிய முனையம், பெற்றோலிய வள அபிவிருத்திச் செயலகம் மற்றும் பொலிப்டோ லங்கா தனியார் நிறுவனத்தில் தொழில்புரியும் அனைத்து ஊழியர்கள் மற்றும் தலைவர்களும் நல்கிய அனைத்து ஆதரவிற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகின்றன.

**அனோமா கமகே, பா.உ**
**பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்**



# அறிமுகக் குறிப்பு

இலங்கையில் கீழ் நிலை மற்றும் மேல் நிலை பெற்றோலியத் தொழிற்துறையில் பிரதான கொள்கைகளை உருவாக்கும் நிறுவனமாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு விளங்குகின்றது. இந் நிறுவனத்தால் ''செயலாற்றுகை அறிக்கை - 2017'' என்ற தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ் செயலாற்றுகை அறிக்கையானது பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இதன் கீழ் வரும் நான்கு நிறுவங்களான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL), பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம்,பொலிப்டோ லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றில் 2017ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற செயற்பாடுகளை விபரமாகக் காட்டுகின்றது

தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலில் உள்ள ஆபத்துக்கள் மற்றும் எரிபொருள் இறக்குமதிச் செலவினங்களைக் குறைப்பதற்காக அனைத்து நீண்ட கால பெறுகை ஒப்பந்தங்களும் நன்கு நெறிப்படுத்தப்பட்டுள்ளன.இதனால் 2017ம் ஆண்டில் மேல் மற்றும் கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறை அபிவிருத்திகளில் அமைச்சு பல தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது.கொலன்னாவை எண்ணெய் முனையத்தில் 15,000 கன மீற்றர் கொள்ளளவுள்ள எரிபொருள் களஞ்சியத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தம் கொடுக்கப்பட்டமை மற்றும் பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எரிபொருட் குழாய்த் தொகுதியையும் எரிபொருள் நிரப்பு முனையத்தையும் மேம்படுத்தி விரிவுபடுத்துதல் போன்ற திட்டங்கள் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சில பெற்றோலிய அபிவிருத்தித் திட்டங்களாகும். அத்துடன் மேலதிகமான எரிபொருள் களஞ்சிய வசதிகளை அதிகரித்தல் மற்றும் எரிபொருட்களைக் கொண்டு செல்லும் குழாய்களை அபிவிருத்தி செய்தல்/புனருத்தாபனம் செயதல் போன்ற சில திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

2016 மற்றும் 2017 பாதீட்டு முனமொழிவுகளுக்கேற்ப தார் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் வர்த்தகம் தாராளமயப்படுத்தப்பட்டுள்ளது.வீதி நிர்மானத் திட்டங்களுக்கு தடங்கலில்லாது தாரை வழங்குவதறகாக தாரை இறக்குமதி செய்வதற்கு, அமைச்சு தார் இறக்குமதியாளருக்கு தார் அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்றது.அத்துடன் தாராளமயப்படுத்தல் செயற்பாடுகளின் கீழ் புதிய உராய்வு நீக்கி எண்ணெய் வர்த்தக செயற்பாட்டாளர்களை பதிவு செய்வதற்கு தகமை வேண்டுகோள்கள் (RFO) கோரப்பட்டுள்ளன.

இறுதியாக, நான் கௌரவ. அமைச்சர், கௌரவ. பிரதி அமைச்சர், ஊழியர்கள் அதே போல் அனைத்து தலைவர்கள் மற்றும் அமைச்சின் கீழ் வரும் நான்கு நிறுவன ஊழியர்களும் மேற்கொண்ட கடின உழைப்பு மற்றும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எனது நன்றியை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன.

**உபாலி மாறசிங்க**
**செயலாளர்**
**பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**

# அறிமுகம்

பெற்றோலிய கீழ்நிலை மற்றும் மேல்நிலை பெற்றோலியச் செயற்பாடுகளின் முக்கித்துவத்தினை கருத்தில் கொண்டும் தனியாக கொள்கை உருவாக்கத்தினைக் கருத்தில் கொண்டும் பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அமைச்சு 2015.12.08ம் திகதியிடப்பட்ட 1422/22ம் இலக்க விசேட வர்த்தமானியின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. பின்பு பெற்றோலியத் தொழிற்துறை அமைச்சு 2010.04.30ம் திகதியிடப்பட்ட 1651/20ம் இலக்க விசேட வர்த்தமானியின் கீழ் உருவாக்கப்பட்டது.இது கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறை பொறுப்பாக உள்ளதோடு மேல் நிலை பெற்றோலியத் தொழிற்துறை செயற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் உள்ளது. 2015.01.18ம் திகதியிடப்பட்ட 1897/15ம் இலக்க விசேட வர்த்தமானியின் படி பெற்றோலியத் தொழிற்துறை அமைச்சின் செயற்பாடுகள் சக்தி வள அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.எனினும் 2015.09.21ம் திகதியிடப்பட்ட 1933/13ம் இலக்க விசேட வர்த்தமானியின் படி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மேல் நிலை மற்றும் கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறைக்கு தற்போது பொறுப்பாக உள்ளது.

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் துரித அபிவிருத்திப் பணிகளின் காரணமாக எரிபொருள் நுகர்வுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. அனைத்துப் பொருளாதார அபிவிருத்தித் துறைகள் மத்தியில் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய பெற்றோலியக் கைத்தொழிலின் குறுக்குவெட்டுப் பண்புகளின் அடிப்படையில், நாட்டின் சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அபிவிருத்திகளைச் செய்ய வேண்டியுள்ளது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, தனது நிர்வாக மற்றும் முகாமைத்தவக் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் அதேவேளை, நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம், வரையறுக்கப்பட்ட பொலிப்டோ லங்கா தனியார் நிறுவனம் ஆகிய நான்கு நிறுவனங்களுக்குமான கொள்கை உருவாக்கம் மற்றும் பிரதான கணக்கீட்டு நிறுவனம் என்ற வகையில் தொடர்புடைய அனைத்து கொள்கைகளையும் வழிகாட்டல்களையும் அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்துவதில் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இங்கு ஐந்து பிரதான பிரிவுகள் உள்ளன. அவையாவன நிர்வாகம், அபிவிருத்தி, கொள்வனவு நிதிப்பிரிவு மற்றும் உள்ள கணக்காய்வுப் பிரிவு என்பனவாகும்.இப் பிரிவுகள் மூன்று மேலதிகச் செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படுவதோடு செயலாளர் மற்றும் கௌரவ.அமைச்சர் போன்றோர்கள் செயற்திறன் மிக்கதும் செயலூக்கமுடையதுமான தீர்மானங்களை எடுப்பதற்கு இவர்கள் உறுதுணையாக உள்ளனர்

# பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

## தொலைநோக்கு

மேல்நிலை மற்றும் கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறை இரண்டையும் இலங்கையின் தேசிய பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் முன்னணித் துறைகளாக உருவாக்கதல்

## பணிக்கூற்று


மேல்நிலை மற்றும் கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறையின் செயற்பாடுகளை நாட்டின் பெற்றோலிய வளங்களுக்கு உகந்த முறையிலும் வினைத்திறன் மிக்கதும் பயனுறுதி வாய்ந்நதுமான நிலைபேறான முறையில் முகாமைசெய்தல்




## குறிக்கோள்கள்

- 2030ம் ஆண்டாகும் போது இலங்கையை சக்தி வளத் துறையில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றுதல்
- 2030ம் ஆண்டாகும் போது உள்நாட்டு எண்ணெய் மற்றும் இயற்கை வாயு உற்பத்தியை உச்சபப்புடுத்தல்
- 2030ம் ஆண்டாகும் போது சுயமான செய்முறையில் ஊடாக நாட்டின் பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியை பூர்த்தி செய்தல்
- டீசல் மற்றும் பெற்றோலியத் தரத்தை முறையே EURO III மற்றும் EURO IV நியமத் தரங்களுக்கு தரமுயர்த்துதல்
- எரிபொருளை மிகவும் வனைத்திறன் மிக்க முறையிலும் பாதுகாப்பபான முறையில் களஞ்சியப்படுத்தி விநியோகித்தல்
- பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கனை பெற்றோலி எரிபொருளாக மாற்றுவதன் ஊடாக பிளாஸ்டிக்கினால் சுற்றாடலுக்கு ஏறற்படும் ஆபத்துக்களை துறைத்தல்

# நிர்வாகக் கட்டமைப்பு



## 2017 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறான அமைச்சின் ஆளணி

| பதவி | அனுமதியளிக்கப்பட்டவை | தற்போய ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | |
| செயலாளர் | 01 | 01 | - |
| மேலதிகச் செயலாளர் | 03 | 03 | - |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | - |
| சிரேஸ்ட உதவிச் செயலாளர் | 02 | 01 | 01 |
| சிரேஸ்ட உள்ளக் கணக்காளர் | 01 | 01 | - |
| பணிப்பாளர் | 02 | 02 | - |
| உதவிச் செயலாளர் | 02 | 01 | 01 |
| உதவிப் பணிப்பாளர் | 02 | 02 | - |
| கணக்காளர் | 01 | - | 01 |
| சட்ட உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொத்தம் | **16** | **13** | **03** |
| **இடைநிலை மட்டம்** | | | |
| நிர்வாக உத்டதியோகத்தர் | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 |
| மொத்தம் | **02** | **01** | **01** |
| **மூனறாம் நிலை மட்டம்** | | | |
| அபிவிருத்தி உதவியாளர்/ உத்தியோகத்தர் | 20 | 18 | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 27 | 17 | 10 |
| தகவல் தொழிநுட்ப உதவியாளர் | 02 | 02 | - |
| செயலாளருக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிழற்பட பிடிப்பாளர் | 01 | 01 | - |
| வீடியோ படப் பிடிப்பாளர் | 01 | 01 | - |
| மொத்தம் | **52** | **40** | **12** |
| **ஆரம்ப நிலை மட்டம்** | | | |
| சாரதி | 13 | 11 | 02 |
| நிழற்பட பிடிப்பு உதவியாளர் | 01 | - | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 13 | 10 | 03 |
| மொத்தம் | **27** | **21** | **06** |
| மொத்தம் | **97** | **75** | **22** |


# இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## தொலைநோக்கு

தேசத்தின் சுபீட்சத்திற்கு பங்களிப்புச் செய்து பிராந்தியத்தில் பெற்றோலியம் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழிலில் வாடிக்கையாளர் விரும்பத்தகு, நம்பகத்தகு, சூழல் நட்புமிகு தொழில்முயற்சியில் முதன்மை பெற்று விளங்குதல்.

## பணிக்கூற்று

ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் பற்றிய மிகுந்த கரிசனையுடனும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதுடனும் கூடிய அனைத்து செயற்பாடுகளிலும் தொழிலாளர் பங்களிப்பினை ஈடுபடுத்தல், புதுமை படைத்தல் மற்றும் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை பேணுதல் என்பவை ஊடாக தொழில்முயற்சியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற அதேவேளை விசுவாசமும் வினைத்திறனுமிக்க விநியோகத்தர் வலைப்பின்னலொன்றினூடாக வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களையும் விஞ்சுகின்ற அனைத்து தீர்வுகளையும் சேவைகளையயும் வழங்குவதனூடாக உயர்தரமிக்க பெற்றோலிய சுத்திகரிப்பு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளில் தலைசிறந்த தரத்தினை அடையப் பெறல்.




## குறிக்கோள்கள்

- மிக உயர் மட்டத்திலான சந்தைப் பங்கைத் தக்கவைத்தல்.
- கடுமையான போட்டித்தன்மை கொண்ட சூழலுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் விற்பனை, சந்தைப்படுத்தல், தொழிற்பாடு என்பவற்றில் உன்னத நிலையை அடைதல்
- பொருளாதார ரீதியாக வெற்றியளிக்கக்கூடிய சுத்திகரிப்புத் துறையொன்றைப் பேணி வருதல்
- அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்கள் மத்தியில் அதிஉயர் மட்டத்திலான உயர்தொழில்சார் பண்புகளை மேம்படுத்திப் பேணி வருதல்.
- உற்பத்தித்திறனையும் முகாமையையும் மேம்படுத்துவதற்காக கட்டமைப்பு மாற்றங்களை அறிமுகப்படுத்துதல்.
- குறித்துரைக்கப்பட்ட தரநியமங்ககளை விஞ்சும் விதத்தில் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சூழல் நட்புறவான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்
- சமுதாயத்தின் நலனுக்காக தேசிய மற்றும் சமூக கடப்பாடுகளை ஊக்குவித்தல்.
- கூட்டுத்தபானத்தின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துதல்
- பெற்றோலிய கீழ்நிலை துறையில் இலங்கையின் கட்டுப்பாட்டைத் தக்க வைத்தல்

# வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் நிறுவனம்

## தொலைநோக்கு

தென்னாசியாவில் வினைத்திறன்மிக்க பெற்றோலிய முனைய (Terminal) செயற்படுத்துனராக இருத்தல்

## பணிக்கூற்று

வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களின் பின்னூட்டுதல்கள் மூலம் வழிகாட்டப்பட்ட, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட தொழிற்சக்தியுடன், அர்ப்பணமிக்க நம்பிக்கையான பங்குபற்றுகையினூடாக ஆரோக்கியம், சூழல் மற்றும் பாதுகாப்பு நியமங்களை மதித்து, வாடிக்கையாளர்கள் மற்றும் முனையவசதி பயன்படுத்துனர்களுக்கு வழங்கப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் சரியான அளவை உறுதிப்படுத்தி தரத்தைப் பேணுகின்ற அதேநேரம், வாடிக்கையாளர் திருப்தி மட்டத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைச் செய்வதற்கான அர்ப்பணத்துடன் பங்காளிகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி நாட்டில் வினைத்திறன்மிக்க முனைய செயற்படுத்துனராக இருத்தல்.




## குறிக்கோள்கள்

- நாட்டில் வினைத்திறன்மிக்க முனைய செயற்படுத்துனராக இருத்தல்
- நாட்டில் தரமான பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தி பராமரிப்பதற்கான வசதிகளை மேம்படுத்துதலும் எதிர்காலத் தேவைகளுக்கு முகங்கொடுக்கக் கூடியவகையில் வழங்களை மேற்கொள்ளுதலும்
- நாட்டில் இடையராத வழங்களைப் பேணும்வகையில் தர மேம்பாடு மற்றும் உடனடி வழங்களில் வாடிக்கையாளர்களின் திருப்திமட்டத்தை அதிகரித்தல்
- சமூகத்தின் நன்மைக்காக தேசிய மற்றும் சமூகக் கடப்பாடுகளைக் கடைப்பிடித்தல
- குறித்த நியமங்களைத் தாண்டிச் செல்லும்வகையில் நிறுவன ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் நட்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- ஊழியர்களின் சகல மட்டங்களிலும் உயர்ந்த தொழின்மை மட்டத்தை மேம்படுத்திப் பேணுதல்

# பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம்

## தொலைநோக்கு

பெற்றோலியம் தொழிற்துறையை நியாயமாகவும் பாதுகாப்பாகவும் சூழல் நிலைபேறான வகையிலும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் நாட்டின் பெற்றோலிய வளங்களிலிருந்து எல்லா இலங்கையர்களும் பயனடைவதை உறுதிசெய்தல்.

## பணிக்கூற்று

நாட்டின் வளர்ந்துவரும் பொருளாதார தேவைகளுக்கு முகம்கொடுக்கும் அரச வருமான ஆட்சிமுறைகளை முதலீட்டைக் கவருகின்ற, இறுதி பொருளாதார சேமிப்பும் பயன்தரும் வரை அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கின்ற ஒரு நிலையானதும் வினைத்திறன் மிக்கதுமான முறைப்படுத்தும் சட்டகத்துடன் இணைத்து, வடிவமைத்து கண்காணித்தல்.




## குறிக்கோள்கள்

சுதேச எண்ணெய் மற்றும் இயற்கை வாயு அகழ்வு அதனோடிணைந்த சமூக பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதோடு தேசியசக்தி வலுத் துறைக்கும் பாதுகாப்பினை உறுதிசெய்கின்றது.


# வரையறுக்கப்பட்ட பொலிட்போ லங்கா தனியார் நிறுவனம்

## தொலைநோக்கு

ஆசியாவில் மிகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கழிவை சக்திவளமாக மாற்றும் தொழில்மையமாக இருத்தல்

## பணிக்கூற்று

சூழலைப் பாதுகாப்பதற்கு கழிவு பிளாஸ்டிக் பொருட்களை எளிமையாகவும் பாதுகாப்பாகவும் இலாபகரமானதாகவும் பயன்படுத்துனர் நட்புடைய பெற்றோலிய உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கு வழிசெய்யும் புதிய இலங்கை கண்டுபிடிப்பை வர்த்தகமயப்படுத்துவதும், குறித்த துறைகளில் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதில் சகல வழிகளையும் கண்டறிவதோடு இலங்கைக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதன் செலவைக் குறைத்தலும்.




## குறிக்கோள்கள்

சூழலுக்கு பிளாஸ்டிக் கழிவுகளால் வரும் ஆபத்துக்களைக் குறைத்து அதனை எரிபொருளாக மாற்றுதல்

# 1. கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள

## (அ) இயற்கை வாயுவிற்கான தேசிய கொள்கையை உருவாக்குதல்

கடந்த காலங்களில் அபிவிருத்திகளை முன்னெடுத்த அரசாங்கத்தால், இலங்கையில் எண்ணெய் மற்றும் வாயு அகழ்வுக்கான அடிக்கல்லை நாட்ட முடிந்துள்ளது. இலங்கையில், கடற்படுக்கையில் வாயுப்படிமங்கள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள “Dorado" படிமக்கிணறு 300 BCF (பில்லியன் கனஅடி) இயற்கை வாயுவினை கொண்டுள்ளதோடு, இதனைப் பயன்படுத்தி 630MW சக்தி வலுவினைக்கொண்ட சக்தி வலு நிலையங்களுக்கு 10வருடங்களுக்கு சக்தி வலுவினை வழங்கமுடியும். மிகப்பெரியதும் சிக்கலானதுமான “Barracuda" படிமக்கிணறில் 1.8 TCF (ட்றில்லியன் கனஅடி) க்குஅதிகமான இயற்கை வாயுப்படிமங்கள் காணப்படுகின்றன. இதனைப்பயன்படுத்தி 2,000MW கொண்ட சக்தி வலுநிலையங்களுக்கு 30 வருடங்களிற்கு சக்தி வலுவினை வழங்க முடியும். தற்போது கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து எண்ணெய் மற்றும் வாயுப்படிமங்களை, சர்வதேச போட்டி கேள்விமனு அடிப்பயில் வர்த்தக மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுட்டுள்ளன.

தற்போது, உலகம்பூராவும், இயற்கைவாயு மிகத்தூய்மையான சக்திவலுவாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இவ் இயற்கைவாயு இலங்கையில், சக்திவலு மற்றும் பன்முகப்பட்ட பாவனை ஆகிய இருதுறைகளிலும் முக்கியத்துவம் பெற்ற எரிபொருளாகக் காணப்படுகின்றது. ஆகவே, இலங்கையில் இவ் இயற்கைவாயு, சக்தி வலுநிலையங்கள், கைத்தொழில், வீட்டுப்பாவனை மற்றும் வர்த்தகரீதியாக பாவனை ஆகிய துறைகளில் எரிபொருளாக அல்லது இவற்றிற்கு சக்தியை வழங்கும் எரிபொருளாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது.இவ் இயற்கை வாயுவிற்கான கேள்வியானது சந்தை நிலைமை மற்றும் கொள்கை அடிப்படையில் பெறப்பட்ட இயற்கை படிமங்களில் இருந்தோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட திரவ இயற்கைவாயு மூலமாகவோ பூர்த்திசெய்யப்படுகின்றது.

இயற்கை வாயுவினை அரசாங்கம் ஆரம்பத்தில் நாட்டின் சக்திவலுவைப் பிறப்பிப்பதற்கே பயன்படுத்துகின்றது. பின்பு, இவ் இயற்கைவாயுவினை கைத்தொழில் தொழிற்துறை மற்றும் போக்குவரத்து துறையில் பயன்படுத்த ஆர்வமுள்ள நபர்களிடம் இது தொடர்பாக கலந்துரையாடப்படும். அதேவேளை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இயற்கைவாயுவிற்கான தேசியக்கொள்கை வரைபை உருவாக்கியுள்ளது. தற்போது, அமைச்சு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் போன்றன ஒன்றிணைந்து இக்கொள்கையை மீளாய்வு செய்துள்ளன. இச்செயற்பாடுகள் முற்றுப்பெற்றதும், இக்கொள்கையை மேலும் மெருகேற்றுமுகமாக இத்துறையுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கயுளுடன் ஒன்றிணைந்து ஆலோசனை கருத்தரங்கு ஒன்று ஒழுங்குசெய்யப்படும்.

## (ஆ) எண்ணெய் பெறுகைகள்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், நாட்டிலிலுள்ள மிகப்பெரிய பெற்றோலிய உற்பத்தி இறக்குமதியாளராக விளங்குகின்றது. விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட நிலையியல் பெறுகைகள் குழுவின் ஊடாக கவனமான முறையில்

கொள்வனவுப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் இறக்குமதி விலைகள் இரு கூறுகளைக் கொண்டுள்ளது. ஒன்று உலக சந்தை விலை மற்றையது நிலையான கட்டணம்.அநேக சந்தர்ப்பங்களில் உலக சந்தையில் ஏற்படும் விலைத் தளம்பல் காரணமாக நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் கொள்வனவு செய்வதிலும் பார்க்க ஸ்பொட் அடிப்படையில் கொள்வனவு செய்தல் அதிக தவணைக் கட்டணத்தினை செலுத்த நேரிடுகிறது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் நிலையான தவணைக் கட்டணங்களைப் பேணுவதற்கு நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் கொள்வனவு செய்வதிலேயே கவனம் செலுத்தியுள்ளது. நீண்ட கால ஒப்பந்தங்களின் அடிப்படையிலான பெறுகைகளின் ஊடாக தடங்கலற்ற எரிபொருள் விநியோகம் உறுதி செய்யப்படுகின்றது. சில வேளைகளில் ஸ்பொட் அடிப்படையில் கொள்வனவு செய்தல் மூலம் கேள்வித் தளம்பல்கள் ஏற்படுகின்றன. ஆத்துடன் போதியளவு கையிருப்பு மட்டங்களைப் பேணி வருவதற்கும் அதன் மூலம் எரிசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### (இ) நாட்டுக்குக் குறுக்கேயான குழாய்த் தொகுதிச் செயற்திட்டம்

கொழும்பு துறைமுகத்திலுள்ள டொல்பின்(Dolphin) அலைதாங்கி பொருட்களை ஏற்றும் இயந்திரங்களையும் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், விமானங்களுக்கான டர்பைன் எரிபொருள் (Jet A-1) மற்றும் உலை எண்ணெய் என்பன போன்ற இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குவதற்ககான வசதிகளையும், அவற்றை தற்போது காணப்படும் 40-70 வருடங்கள் பழைமையானதும் எதிர்காலத்தில் தொடர்ச்சியானதும் தடங்கலற்றதுமான தொழிற்பாட்டை மேற்கொள்வதற்கு உடனடியாக மாற்றப்பட வேண்டியுள்ளதுமான மூன்று குழாய்த் தொகுதிகளின் ஊடாக கொலன்னாவை முனையத்திற்குக் கொண்டு செல்லும் வசதியையும் கொண்டுள்ளது. இக்குழாய்த் தொகுதிகள், பெற்றோலிய உற்பத்திகளை கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை வரையில் கொண்டு செல்வதற்காக 1940 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டவையாகும். இவற்றில் இரண்டு குழாய்த் தொகுதிகள், குழாய்த் தொகுதிப் பாதையில் சட்டவிரோத குடியிருப்பாளர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாமையினால் பல வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையிலுள்ளன.

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டதனைத் தொடர்ந்து 1969 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு குழாய்த் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டன. 70 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆரம்ப (original) குழாய்த் தொகுதியும் சுமார் 43 வருடங்கள் பழைமை வாய்ந்த ஏனைய இரண்டு குழாய்த் தொகுதிகளுமே முடிவுப் பொருளான பெற்றோலிய உற்பத்திகளினதும் மசகு எண்ணெய்யினதும் மொத்த இறக்குமதிகளையும் கையாள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. உண்மையில் இத்தகைய பெற்றோலியக் குழாய்த் தொகுதிகளின் வடிவமைக்கும் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம் 25 வருடங்கள் மாத்திரமே.

பெற்றோலிய உற்பத்திகளுக்கான தேசிய தேவையில், பாரியளவு பகுதி இந்த சிதைவடைந்த குழாய்த் தொகுதிகளின் ஊடாகக் கொலன்னாவைக்குக் கொண்டு செல்லப்படுவதனால், இக்குழாய்த் தொகுதிகளைப் புதுப்பித்து நவீனமயமப்படுத்து மிக அவசரத் தேவையாக உள்ளது.

**எதிர்பார்க்கப்படும் பயன்கள்:**

- பெற்றோலிய உற்பத்திகளுக்கான தேசிய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுதல்
- கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு வினைத்திறன்மிக்க முறையில் பெற்றோலிய உற்பத்திகள் கொண்டு செல்லப்படுதல்.
- இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் தரம் இறுதி நுகர்வோரைச் சென்றடையும் வரை பேணப்படுதல்.
- எதிர்காலத்தில் ஏற்படும் கேள்விகளை ஈடுசெய்யத் தயார் நிலையில் இருத்தலும் தொடர்ச்சியான வழங்கலை பேணி வருதலும்
- கையிருப்பு இழப்புக்களைக் குறைத்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையத்திற்கும் ஏற்படும் நிதியியல் இழப்புக்கள் குறைவடைதல்.
- அழிவடைந்துள்ள குழாய்த் தொகுதிகளின் அதிகபட்ச பராமரிப்புச் செலவினங்களைக் குறைத்தல்.

இச்செயற்திட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்காகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, வரையறுக்கப்பட்ட பெற்றோலிய களஞ்சி முனையம் என்வற்றுடனான ஒருங்கிணைப்புப் பணி இவ் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்பநிலை இடவியல்பு ஆய்வுகள், புவியியல் ஆய்வுகள், ஆரம்பநிலை சுற்றாடல் பரிசோதனைகள், மிகவும் பொருத்தமான (சாத்தியமான) குழாய் பரப்பு வழி, பாதிக்கப்படும் தரப்புக்களுக்கு நட்டஈடு மற்றும் பரிகாரங்கள் வழங்குதல் என்பன போன்ற இச்செயற்திட்டத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது இச்செயற்திட்டத்திற்கான நிதியைப் பெறும் செயன்முறையும் பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யும் செயன்முறையும் நடைபெற்று வருகின்றன. இவ் அமைச்சு இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் கொள்கைத் தீர்மானங்களையும் எடுத்துள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியம் களஞ்சிய முனையம் பணிப்பாளர் சபையின் 2015.12.24 ஆந் திகதிய தீர்மானத்திற்கு இணங்க, இச்செயற் திட்டத்தின் நோக்கெல்லையானது, கொலன்னாவை முனையத்திலிருந்து டொல்பின் அலைதாங்கி வரையான முழுச் செயற்திட்டத்திற்குமான EPC ஒப்பந்தத்துக்கு இணங்க, 01 புதிய 14'' விட்டமுள்ள பிக்கபல் குழாய்த் தொகுதியையும், 01 புதிய 18'' விட்டமுள்ள பிக்கபல் குழாய்த் தொகுதியையும் பொருத்துவதையும் கொலன்னாவை முனைய திருத்த வேலைகள் மற்றும் டொல்ஃபின் அலைதாங்கியில் மூன்று குழாய்த் தொகுதிகளுக்கான ஏற்றல் புயங்களைப் பொருத்துதல் அடங்கலாக கரைக்கு அப்பால், டொல்ஃபின் அலைதாங்கி மற்றும் உறுகொடவத்தை பிரதான புகையிரதக் கடவை ஆகிய இடங்களில் 12'' துண்டங்கள் மூன்றையும் பொருத்துவதை உள்ளடக்கியுள்ளது.

2016.04.28ம் திகதியிடப்பட்ட 16/0785/746/002-Iம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனபனத்தின் படி 2016.05.10ம் திகதி அமைச்சரவை அமைச்சர்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி மேற்படி திட்டத்திற்கு G-G முறையுடன் 100% நிதியிடலுடன் கூடிய EPC turn key அடிப்படையில் ஐக்கிய அமெரிக்கா, மக்கள் சீனக் குடியரசு இந்திய குடியரசு மற்றும் மலேசிய அரசாங்கங்களிடமிருந்து தலா ஒவ்வொரு திட்ட முன்மொழிவு அந் நாட்டு தூதரகம்/ உயர் ஸ்தானிகராலயத்தினூடாக பெற்றுக்கொள்ளுவதற்கு அமைச்சரவை அமைச்சர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.இதற்கிணங்க இக் கொள்வனவு செயற்பாடுகள் மற்றும் அந் நாடுகளிடமிருந்து

கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### (ஈ) பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எரிபொருட் குழாய்த் தொகுதியையும் எரிபொருள் நிரப்பு முனையத்தையும் மேம்படுத்தி விரிவுபடுத்தும் செயற்திட்டம்

பண்டாரநாயக சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டம் கட்டம் II படிமுறை 2 உடன் இணைந்த வகையில் இவ் அமைச்சு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்துடன் இணைந்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்திலுள்ள விமான எரிபொருள் நிரப்பும் முனையத்தையும் எரிபொருட் குழாய்த் தொகுதியையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் மேலதிக களஞ்சிய வசதிகளை நிர்மாணித்தல், தற்போது காணப்படும் எரிபொருட் குழாய்த் தொகுதியை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்தல் என்பன இச்செயற்திட்டத்தின் பிரதான ஆக்கக்கூறுகளாகும். பொறியியல் மதிப்பீட்டின் படி, இச்செயற்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 61 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். இச்செயற்திட்டம் இவ் அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் ஊடாக வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவை கம்பனியுடன் இணைந்து மேற்கொள்ளவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2015.12.09ம் திகதியிடப்பட்ட 15/1883/746/008/TBR அமைச்சரவைத் தீர்மானத்தின் படி ICB அடிப்படையில் பொருத்தமான EPC ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்கு கேள்வி மனு கோரப்பட்டுள்ளது. US$ 51.5 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் M/s WEC Engineers and Construction தனியார் நிறுவனம் மற்றும் China National Chemical தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.இத் திட்டத்தை 2020ம் ஆண்டு யூலை மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### (ஊ) திருகோணமலையிலுள்ள மேல் எண்ணெய் தாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம்

திருகோணமலைத் துறைமுகம் உலகின் மிக ஆழமான இயற்கைத் துறைமுகங்களில் இரண்டாவது இடத்திலுள்ளதுடன் இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் அமைவிடத்தில் அது அமைந்துள்ளதனால் முழு உலகினதும் கவனத்தை அது ஈர்த்துள்ளது. குடியேற்ற காலத்தில் இது இப்பகுதியிலிருந்த பிரிட்டிஷ் கடற்படையினால் பயன்படுத்தப்பட்டு வந்தது. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் பிரித்தானிய அரசால் எண்ணெய்த் தாங்கிப் பண்ணை 1930 ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது. இப் பண்ணை ஒவ்வொன்றும் 12,500m$^3$ (10,000 MT) கொள்ளளவைக் கொண்ட 102 தகர தாங்கிகளையும் ஏனைய வசதிகளையும் கொண்டுள்ளது.தற்போது, கீழ் நிலைத் தாங்கிப் பண்ணையில் உள்ள14 தாங்கிகள் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியால்(LIOC) உபயோகிக்கப்பட்டு வருவதோடு 85 மேல் எண்ணெய் தாங்கிப் பண்ணைகள் பல்லேறு காரணங்களுக்காக பயன்படுத்தப்படாது கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்பாட்டுத் துறையில் பெரும் இலாபத்தினை ஈட்டும் முக்கிய பங்காளியாக உள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது தற்போதைய வியாபாரத்தை உராய்வு எண்ணெய்,தார், கப்பல் எண்ணெய் மற்றும் திரவ பெற்றோலிய எரி வாயு போன்ற செயற்பாடுகள் மூலம் விரிவுபடுத்துகின்றது. இதற்கு களஞ்சியப்படுத்தல் வசதிகள், வினைத்திறன்மிக்க வெளியேற்றல்

வசதிகள், மாற்றல் குழாய்த் தொகுதிகள் மற்றும் இதனோடு தொடர்புடைய ஏனைய வசதிகள் அடங்கிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இருப்பது அத்தியவசியமானதாகும்.

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் மற்றும் ஏனைய தொகைக் களஞ்சியங்களுக்கு தேவையான எரிபொருள் திருகோணமலை தாங்கிப் பண்ணையின் ஊடாகவே விநியோகம் செய்யப்படுகின்றது. இன் மூலம் செலவு சேமிப்புக்களும் போக்குவரத்து நெரிசல்களும் குறைக்கப்படுகின்றன. அத்துடன் எந்த வகையான காலநிலைச் சூழலிலும் எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் திருகோணமலை துறைமுகத்தில் எண்ணெய்ச் செயற்பாடுகளைத் தொடாந்தும் முன்னெடுப்பதற்கான சாத்திப்பாடுகள் உள்ளன. இங்கு புகையிரதப் போக்குவரத்தைப் பயன்படுத்தக் கூடியதாக இருப்பது இதன் ஒரு மேலதிக நன்மையாகும். இவை தவிர, குறைந்த கட்டணச் செலவுகள், அதிகரித்த விற்பனை வருமானம்,குறைந்த இறங்கு துறைகள் மற்றும் குழாய்த் தொகுதிக் கட்டணங்களின காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் பலவாகும்.

மேலும், இலங்கையின் இயற்கை புவியியல் அமைவிடத்தைக் கவனத்திற் கொண்டு நோக்குகையில் மேற்குறித்த எண்ணெய் தாங்கி வசதியை பிராந்தியத்திற்கு மட்டுமன்றி முழு உலகிற்குமான எண்ணெய் விற்பனைத் தளமாகவும் இதனைப் பயன்படுத்துவதற்கான சிறந்ததொரு வாய்ப்புக் காணப்படுகின்றது.

2016.04.28ம் திகதியிடப்பட்ட 16/0786/746/008ம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தாங்களின் புனரமைப்பு/அபிவிருத்தி மற்றும் தாங்கி குத இறங்குதுறையிலிருந்து செல்லும் குழாய்த் தொகுதி உள்ளிட்ட குழாய்த் தொகுதிகளின் நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு திருகோணமலை மேல் தாங்கிப் பண்ணையிலுள்ள 16 தாங்கிகளின் உரிமையை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்திற்கு வழங்குதல் மற்றும் இந்தியன் ஒயில் கம்பனி போன்றவற்றிற்கு கூட்டாக செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு அமைச்சரவை அமைச்சர்களிடமிருந்து ஒப்புதல்கள் கோரப்பட்டுள்ளன. இதன் மூலம் நாட்டிற்றுகு அதிக வெளிநாட்டு நாணய வருமானங்கள் கிடைப்பதுடன் தொழிநுட்ப திறனும் விருத்தியடையும்.

2016.06.06ம் திகதியிடப்பட்ட 16/1062/702/042ம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனமான “இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தாபனம் மற்றும் இந்தியன் ஒயில் கம்பனி சேர்ந்து உருவாக்கப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் கீழ் திருகோணமலை மேல் நிலை எண்ணெயத் தாங்கி செயற்பாடுகளை கையளித்தல்" என்ற தலைப்பிடப்பட்டு கௌரவ.பிரதம மந்திரியால் சமர்ப்பிக்கப்பட்டது.இதன் படி 2016.06.07ம் திகதி பின்வருவனவற்றிற்கு அமைச்சரவையால் ஒப்புல் வழங்கப்பட்டுள்ளது.

i. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தாபனம் மற்றும் இந்தியன் ஒயில் கம்பனி சேர்ந்து உருவாக்கப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் கீழ் திருகோணமலையில் உள்ள 84 மேல் நிலை எண்ணெயத் தாங்கி செயற்பாடுகளை வழங்குதல் மற்றும் 30 எண்ணெய்த் தாங்கிகளை குறிப்பிட்ட காலத்தில் அபிவிருத்தி செய்தல்.

ii. கௌரவ.பிரதம மந்திரியால் பொருத்தமான தொழிநுட்பங்களைக் கையாண்டு இந் நடவடிக்கையினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டள்ளது. அத்துடன் மேலே கூறப்பட்ட (i)ற்கு இணங்க பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் சர்வதேச

வர்த்தக மற்றும் திறமுறை அமைச்சர் மற்றும் பிற பொருத்தமான அதிகாரிகள் இதனையே அமைச்சரவைக்கு அறிவுறுத்தியிருந்நதனர்.

2016.07.13ம் திகதி நடைபெற்ற CCEM கூட்டத்தில் இவ் கூட்டு உடன்படிக்கைக்கு பொருத்தமான தொழிநுட்பங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆலோசகர் ஒருவரை தெரிவு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.இதன் செயற்பாடுகள் கலந்துரையாடல் நிலையில் உள்ளன.

### (எ) உராய்வு நீக்கி எண்ணெய் கலப்பு தொழிற்சாலையை நிறுவுதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உராய்வு நீக்கி எண்ணெய்கள் அதன் வருடாந்த வருமானத்தில் 11% பங்களிப்புச் செய்யதுள்ளது. மூன்று பாரிய போட்டியாளாகளுள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஒன்றாகும்.ஏனையவை செவ்றோன் சிலோன் லிமிட்ட் மற்றும் இந்தியன் ஒயில் கம்பனி எனபனவாகும்.இவ் இரு அதி உச்ச சந்தைப் பங்குகளைக் கொண்ட பங்காளர்கள் உள்நாட்டு உராய்வு எண்ணெய் கலப்பு தொழிற்சாலை மூலம் அதிக நன்மையினைப் பெறுகின்றனர். எனினும் முடிவுப் பொருளான உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்து விற்பனை செய்வதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளது.இதன் மூலம் வருடாந்தம் ரூ.2.5 மில்லியனை வருமானமாகப் பெறுகின்றது. இது மொத்தப் புரழ்வில் 0.5 சத வீதமாகும்.இவ் வருமானம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனிப்பட்ட வருமானமாக காணப்படுகின்றது.

அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மலேசிய ஹைரக்ஸ் எண்ணெய்க் கம்பனி SDN BHD உடன் நிர்மானித்தல், இயக்குதல், கைமாறுதல் (BOT) என்ற உடன்படிக்கையின் கீழ் உராய்வு நீக்கி எண்ணெய் கலவை செய்யும் இயந்திரத்தினை முத்துராஜவலவில் நிர்மானித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பங்களிப்பச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.இதன் உற்பத்தித் திறன் வருடமொன்றிற்கு 72,000 மெற்றிக் தொன்களாகும. அத்துடன் நுகர்வோருக்கு ஒரே சீரான விநியோகத்தினை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு USD 13 மில்லியன்களாகும். இத் திட்டதிற்கான மொத்த முதலீடுகளும் மலேசிய ஹைரக்ஸ் எண்ணெய்க் கம்பனி SDN BHD யால் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

உராய்வு நீக்கி எண்ணெய் கலவை செய்யும் இயந்திரத்திரத்தினை நிறுவுவதால் உராய்வு நீக்கி எண்ணெய்க்கான விலைகள் குறைவடைவதோடு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் அதிகரித்து அதிக வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும். அத்துடன் நாட்டிற்கு அதிக அன்னியச் செலாவணி வருமானங்கள் தொழிநுட்ப பயிற்சிகள் மற்றும் புதிய தொழிநுட்ப முறைகள் கிடைக்கப்பெறுவதோடு தடையற்ற எண்ணெய் விநியோகத்தையும் சேமித்தல் செலவுகளையும் குறைக்க முடியும். அத்துடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இழப்புக்களையும் ஈடுசெய்யமுடியும்.

இதற்கான அனைத்து ஒப்பந்தங்களும், மலேசியாவில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மலேசிய ஹைரக்ஸ் எண்ணெய்க் கம்பனி SDN BHD க்கு இடையில் 2016.05.06ம் திகதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் இதற்கான வேலைகள் இன்னும் செயற்பாட்டு நிலையிலையே உள்ளன. இவ் இயந்திரத்தினை நிர்மானித்தல் மற்றும்

நிறுவுவதற்கு 2017, டிசம்பர் இறுதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.எனினும் 2017,மே மாதத்தில் இடம்பெற்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்து மாற்றங்கள் காரணமாக இவ் இயயந்திரத்தினை நிறுவுவதில் தாமதங்கள் ஏற்பட்டன. ஏனெனில் இத் திட்டத்தினை முழுமையாக கற்றறிந்து கொள்ளவேண்டும் என்பதனாலாகும்.

### (ஏ) முதுராஜவலயிலிருந்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் வரைக்குமான Jet A-1 பரிமாற்றல் குழாய்த் தொகுதிகளையும் அதனுடன் தொடர்புடைய வசதிகளையும் நிர்மானிப்பது தொடர்பான சாத்திய வள ஆய்வு

தற்போது காணப்படும் வழங்கல் முறையின் வரையறைகள், எரிபொருள் வழங்களுடன் தொடர்புடைய தர ரீதியான பிரச்சினைகள மற்றும் பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் அதிகரித்துச் செல்லும் ஜெட் A-1 எரிபொருளுக்கான கேள்வியை ஈடுசெய்வதில் எதிர்நோக்கும் சிரமங்களைக் கவனத்திற் கொண்டு முதுராஜவலையிலிருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் வரையான ஜெட் A-1 குழாய்த் தொகுதி மற்றும் பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கங்களின் காரணமாக பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் ஜெட் A-1 எரிபொருளுக்கான கேள்வியை அதிகரிக்கும். ஆரம்பநிலை ஆய்வை நடாத்தியதன் பின்னர், அமைச்சின் வழிகாகாட்டலின் கீழ் இலங்கைப் பெற்றோலியக் கூட்டத்தாபனம் Asprofos Engineering S.A க்கு ஜெட் A-1 குழாய்த் தொகுதி சம்பந்தமான விரிவான சாத்திய வள ஆய்வு மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பான ஆய்வுகளை நடாத்துவதற்கான ஒப்பந்தத்தை அளித்துள்ளது. ஆலோசகருக்கான வேலையின் நோக்கெல்லையில் கொழும்பிலுள்ள பிரதான எரிபொருள் களஞ்சிய முனையங்களைத் தொடர்புபடுத்துவது தொடர்பான ஏற்பாட்டு ஆய்வும் உள்ளடங்கும்.சாத்திய வள ஆய்வுக்கான அறிக்கை ஏற்கனவே ஆலோசகரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் பொருத்தமான நிதியியல் பொறிமுறையைப் பயன்படுத்தி இத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கு கருத்தளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதே நேரத்தில் உத்ததேசிக்கப்பட்ட குழாய்த் தொகுதிகள் உள்ள பாதையில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் இதனால் எழும் ஆபத்துக்கள் பற்றி பொருத்தமான நபர்களுடன் OCEM மற்றும் CCEM குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. உயா கல்வி அமைச்சு மற்றும் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்றன கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக பாதைக்கருகில் இவ் குழாய்களை பொருத்துவதற்கான சாத்திஜயப்பாடுகளை கண்டறிதல் வேண்டும்.இதனால் இத் திட்டத்தின் செலவுகள் மிகவும் குறைவடையும்.தற்போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மேற்கூறப்பட்ட ஆலோசகர் தலைமையில் மேற்பர்வைக் குழுவை அமைத்து இவை தொடர்பாக மேலதிக கற்கை நெறிகளை மேற்கொள்ளுவதற்கு திட்டமிட்டுள்ளது.

### வட மாகாணத்தில் கையிருப்புக் களஞ்சியசாலையை விரிவாக்கம் செய்தல்

வட மாகாணத்தில் எரிபொருள் கையிருப்புக் களஞ்சியம் காங்கேசந்துறை சீமெந்துக் கூட்டுத்தபான வளாகத்தில் அமைந்துள்ளது. அதனைத் தமது வளாகத்திலிருந்து அகற்றிக் கொள்ளுமாறு சீமெந்துக் கூட்டுத்தபானம் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் வேண்டுகோள் விடுத்தது. அதற்கிணங்க வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் உரிய

ஏனைய வசதிகளுடன் 4500 கன மீற்றர் டீசல், 2500 கன மீற்றர் பெற்றோல், 2500 கன மீற்றர் சூளை எண்ணெய், 1000 கன மீற்றர் மண்ணெண்ணெய் என்பவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கான கொள்ளளவு வசதி கொண்டதாக உள்ள ஒரு இடத்தினை இனம் தேவையேற்பட்டுள்ளது.

**எதிர்பார்க்கப்படும் பயன்கள்**

- வட மாகாணத்திற்கான தடங்கலற்ற எரிபொருள் வழங்கல்
- தேவையான சூழல் மற்றும் பாதுகாப்பு நிலைகள் பேணப்படுதல்.
- யுத்தத்தின் பின்னர் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் கைத்தொழில் துறைக்கு தொடர்ச்சியாக எரிபொருள் வழங்கப்படுதல்.
- புகையிரதத்தைப் பயன்படுத்துவதன் மூலம் எரிபொருள் போக்குவரத்துச் செலவைக் குறைத்தல்.
- தரம்வாய்ந்த உற்பத்திப் பொருட்களை தொடர்ச்சியான முறையில் வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் திருப்தியடைதல்.

எவ்வாறாகினும் குறிப்பிட்ட காணியினை இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனதிடமிருந்து விடுவித்து வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையம் தொடர்ந்து தனது செயற்பாடுகளை அவ் இடத்தில் மேற்கொள்ளுவதற்கு கௌரவ அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிணங்க 2016.09.13ம் திகதியிடப்பட்ட 16/1891/746/001-1 ம் இலக்கம் கொண்ட “காங்கேசன் துறையில் உள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையத்தின் பிராந்திய கையிருப்பு களஞ்சியம் அமைந்துள்ள இடத்தினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ளல் மற்றும் அபிவிருத்தி செய்தல்” என்னும் தலைப்பின் கீழ் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இக் காணி உரிமம் தொடர்பாக பிரச்சினைகள் உள்ள நிலையில் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள்


இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டின் அபிவிருத்திக்கு பெட்ரோலிய பொருட்களை இறக்குமதி செய்து அதனை விநியோகித்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றது.இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எப்போதும் வாடிக்கையாளர் திருப்தியை பேணுவதற்காக, தரம் மற்றும் புதுமையான தயாரிப்புகள் இறக்குமதி செயவதினை உறுதி செய்கின்றது. அட்டவணை 2.1 2016 மற்றும் 2017 இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் விபரங்களைக் காட்டுகிறது.

அட்டவணை 2.1 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் 2016 – 2017

| தயாரிப்புகள | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|
| | தொகை | | தொகை | |
| | பீப்பாய்கள் '000 | மெ.தொ '000 | பீப்பாய்கள் '000 | மெ.தொ '000 |
| ஓட்டோ டீசல் | 9,070 | 1,213 | 10,560 | 1,416 |
| சுப்பர் டீசல் | 493 | 65 | 493 | 65 |
| பெற்றோல் - 92 ஒக்டேன் | 5,394 | 634 | 6,361 | 746 |
| பெற்றோல் - 95 ஒக்டேன் | 931 | 110 | 1,204 | 146 |
| ஜெட் A -1 | 2,671 | 337 | 2,235 | 282 |
| குறைந்த சல்பர் எரிபொருள் எண்ணெய் (180CST) | 1,131 | 173 | 2,039 | 313 |
| **மொத்தம்** | **19,690** | **2,532** | **22,892** | **2,968** |

கீழேயுள்ள வரைபடம் 2.1,2014-2017 வரை இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல்,டீசல், ஜெட் A-1 ன் போக்கினைக் காட்டுகின்றது.இதன் மூலம் இலங்கைச் சந்தையில் இப் பொருட்களின் விற்பனையின் அதிகரித்த போக்கனைக் காணலாம்.

**வரைபடம் 2.1** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல்,டீசல் மற்றும் ஜெட் A–1 இறக்குமதிகள் 2014 – 2017




கீழேயுள்ள அட்டவணை 2.2 2013 - டிசம்பர் 2017 வரையான மசகு எண்ணெய் இறக்குமதியைக் காட்டுகின்றது

**அட்டவணை 2.2** 2013– 2017 வரையான மசகு எண்ணெய் இறக்குமதிகள

| ஆண்டு | தொகை (மெ.தொ '000) | இறக்குமதி பெறுமதி (CIF) ரூ.மில்லியன் |
|---|---|---|
| 2013 | 1,743 | 182,064 |
| 2014 | 1,824 | 187,760 |
| 2015 | 1,773 | 100,578 |
| 2016 | 1,685 | 87,198 (DES) |
| 2017 | 1,499 | 100,911 (DES) |

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2018ம் ஆண்டுக்கான பெற்றோலிப் பொருட்கள் தொடர்பான எதிர்வு கூறல் சம்பந்தமான விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை 2.3ல் காட்டப்படுகின்றது.இதில் 2018ம் ஆண்டில் லங்கா ஓட்டோ டீசலுக்கு உயர்ந்த கேள்வி(தொகை ரீதியாக) காணப்படுகிறது. 2018ம் ஆண்டுக்கான நெப்தா இறக்குமதிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எதிர்வு கூறப்படவில்லை. சுத்திகரிப்பு நிலையம் உற்பத்தி செய்யும் நெப்தா உள்நாட்டு நுகர்வுக்கு போமானதாக உள்ளது.

அட்டவணை 2.3 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2018ம் ஆண்டுக்கான பெற்றோலியப் பொருட்களின் கேள்வி எதிர்வு கூறல் (தொகை – மெ.தொ)

| உற்பத்தியின் பெயர் | மொத்த விற்பனை எதிர்வு கூறல்கள் | சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகள் | இறக்குமதி செய்யப்பட வேண்டிய தொகை (மெ.தொ) |
|---|---|---|---|
| பெட்ரோல் 92 | | 162,400 | 837,596 |
| பெட்ரோல் 95 | 180,000 | - | 180,000 |
| லங்கா ஓட்டோ டீசல் | 1,760,100 | 500,300 | 1,259,800 |
| 4 நட்சத்திர லங்கா சுப்பர் டீசல் | 100,000 | - | 100,000 |
| சூளை எண்ணெய் | 788,200 | 478,800 | 309,400 |
| நெப்தா | 118,500 | 118,500 | - |
| ஜெட் A-1 | 535,000 | 227,040 | 307,960 |
| தொழிற்சாலை மண்ணெண்ணெய் | 5,500 | - | 5,500 |
| தார் | 15,000 | - | 15,000 |
| SBP/சோல்வன் | 1,000 | 1,000 | - |
| மண்ணெண்ணெய் | 154,000 | 56,760 | 97,240 |
| திரவ பெற்றோலிய எரிவாயு | 15,000 | 15,000 | - |

அட்டவணை 2.4 பெற்றோலியப் பொருட்களுக்கான அரசாங்க வரிகள் (2017.01.01ம் திகதி உள்ளவாறான)

| உற்பத்திகள் | H/S Code | CID | VAT | EXCISE | PAL | CESS | NBT |
|---|---|---|---|---|---|---|---|
| டீசல் | 2710.19.40 | ரூ. 12 லீற்றர் ஒன்றிற்கு | இல்லை | ரூ. 13 லீற்றர் ஒன்றிற்கு | 7.5% (பற்றுச் சீட்டுப் பெறுமதி) | - | இல்லை |
| பெட்ரோல் | 2710.12.20 | ரூ. 25 லீற்றர் ஒன்றிற்கு | இல்லை | ரூ. 27 லீற்றர் ஒன்றிற்கு | 7.5% (பற்றுச் சீட்டுப் பெறுமதி) | - | இல்லை |
| ஜெட் A-1 | 2710.19.20 | இல்லை | இல்லை | இல்லை | 0% | - | இல்லை |
| உலை எண்ணெய் | 2710.19.60 | இல்லை | இல்லை | இல்லை | 7.5% (பற்றுச் சீட்டுப் பெறுமதி) | - | இல்லை |
| மசகு எண்ணெய் | 2709.00.10 | இல்லை | இல்லை | இல்லை | 2.5% (பற்றுச் சீட்டுப் பெறுமதி) | - | இல்லை |
| தார் | 2713.20 | இல்லை | | | | | |

# 3. பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல

## 3.1 எரிபொருள் களஞ்சியம்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் இரு பிரதான நிறுவகங்களைக் கொண்டுள்ளது. ஒன்று கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல மற்றையது நாடு பூராகவும் உள்ள 11 மொத்த கையிருப்பு களஞ்சியங்கள். எதிர்கால விரிவாக்க திறன் மற்றும் எரிபொருள் தொகையினை கையாளும் திறன் என்பவற்றின் அடிப்படையில் இவை இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன.

**தரம் I களஞ்சியசாலை**
பேராதனை, காலி, குருநாகல், மட்டக்களப்பு, அனுராதபுரம், பதுளை, மற்றும் காங்கேசன்துறை

**தரம் II களஞ்சியசாலை**
கொட்டகலை, ஹப்புத்தளை, மாத்தறை, சரசவி உயன

கொலன்னாவ நிறுவகம் 12 பெட்ரோலிய பொருட்கள் கையாளுகிறது. அவையாவன நெப்தா, விமான பெட்ரோல் 100 ஒக்டேன், பெட்ரோல் 95 ஒக்டேன், பெட்ரோல் 92 ஒக்டேன், ஒளியேற்றுவதற்கான மண்ணெண்ணெய், ஜெட் எரிபொருள், தொழிற்சாலை மண்ணெண்ணெய், சிறப்பு கொதி நிலை தயாரிப்புக்கள் (SBP) சுப்பர் டீசல், ஓட்டோ டீசல், சூளை எண்ணெய் 800 Sec, உலை எண்ணெய் (உயர் சல்பர்) 1500 Sec மற்றும் இவற்றின் களஞ்சியத் திறன் கீழேயுள்ள அட்டவணை 3.1ல் காட்டப்பபடுகின்றது.

அட்டவணை 3.1 கொலன்னாவை– தாங்கிக் கொள்ளளவு

| உற்பத்தி வகை | களஞ்சியத் திறன் (மெ.தொ) |
|---|---|
| நெப்தா | 13,570 |
| பெட்ரோல் 95 ஒக்டேன் | 18,570 |
| பெட்ரோல் 92 ஒக்டேன் | 47,900 |
| ஒளியேற்றுவதற்கான மண்ணெண்ணெய் | 16,700 |
| ஜெட் A-1 | 30,000 |
| ஓட்டோ டீசல் | 49,065 |
| சுப்பர் டீசல் | 12,940 |
| உலை எண்ணெய் 800/1000 Sec | 53,870 |
| சிறப்பு கொதி நிலை தயாரிப்புக்கள் (SBP) | 770 |
| தொழிற்சாலை மண்ணெண்ணெய் | 1,564 |
| மொத்தம் | 244,949 |

முத்துராஜவெல நிறுவகம் 04 பெட்ரோலிய பொருட்களை கையாளுகிறது. அவையாவன பெட்ரோல் 92 ஒக்டேன், மண்ணெண்ணெய், ஓட்டோ டீசல், சூளை எண்ணெய் (குறை சல்பர்) 1500 Sec என்பனவாகும். இவற்றின் களஞ்சியத் திறன் கீழேயுள்ள அட்டவணை 3.2ல் காட்டப்பபடுகின்றது.

அட்டவணை 3.2 முத்துராஜவெல – களஞ்சியத் திறன்

| உற்பத்தி வகை | களஞ்சியத் திறன் (மெ.தொ) |
|---|---|
| பெட்ரோல் 92 ஒக்டேன் | 53,829 |
| ஒளியேற்றுவதற்கான மண்ணெண்ணெய் | 4,225 |
| ஓட்டோ டீசல் | 112,814 |
| சூளை எண்ணெய் (குறை சல்பர்) 1500 Sec | 51,904 |
| **மொத்தம்** | **222,772** |

## 3.2 எரிபொருள் விநியோகம்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் இரு சந்தைப்படுத்தல் நிறுவனம் சார்பாக தொகை ரீதியான (Bulk) விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. அவையாவன இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) மற்றும் இலங்கை இந்திய எண்ணெய் கம்பனி (LIOC). கொலொன்னாவ மற்றும் முத்துராஜவெல வில் இரண்டு முக்கிய முனையங்கள் உள்ளன. நாடு பூராகவும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் வெளிமாவட்டங்களில் 11 தொகை களஞ்சிய சாலைகளையும் ஒரு(01) உள்நாட்டு புகையிரத விநியோக நிலைய தொகை களஞ்சிய சாலையையும் கொண்டுள்ளது. இதன் விநியோக நடவடிக்கைகள கொலன்னாவ மற்றும் முத்துராஜவெலவில் இருந்து கொள்கலன்கள் மூலம் தரை மார்க்கமாகவும் புகையிரதம் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. விமானங்களுக்கான எரிபொருள் கொலன்னாவ முனையத்தில் மட்டுமே களஞ்சியப்படுத்தப்படுகின்றது. இவை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு தினமும் தரை மார்க்கமாகவும் புகையிரதம் வாயிலாகவும் கொள்கலன்கள் மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. உலை எண்ணெய் கொலன்னாவ முனையத்தில் இருந்து மின்சார நிலையங்களுக்கு குழாய் வழியாகவும் தரை வழி கொள்கலன்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

கொலன்னாவ முனையத்திற்கு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குழாய் வழியாகவும் கொழும்புத் துறைமுகத்திலுள்ள டொல்பின் இறங்கு துறை வழியாக இறக்குமதி செய்யப்படும் முடிவு பெற்றோலியப் பொருட்கள் மூலமும் மொத்த கையிருப்புக்கான எரிபொருள் கிடைக்கப்பெறுகின்றது. கெரவலப்பிட்டிய கரையிலிருந்து 06 கி.மீ தொலைவில் உள்ள SPBM இறங்கு துறை வழியாக இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்கள் மூலம் மட்டுமே முத்துராஜவெல முனையத்திற்கு மொத்த கையிருப்புக்கான எரிபொருள் கிடைக்கப்பெறுகின்றது.

ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 2017 வரையான காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் பல்வேறு இடங்களில் மேற்கொண்ட விற்பனைகளின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை 3.3 மற்றும் அட்டவணை 3.4ல் காட்டப்படுகின்றன. இக் காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் பல்வேறு இடங்களில் மேற்கொண்ட மொத்த விற்பனைகள் 3,293,282.34 கிலோ லீற்றராகும். மொத்த விறபனையில் 54% எரிபொருள் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையத்திலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கொள்கலன் வண்டிகள் மூலமே எடுத்துச் செல்லப்படுகின்றன. 10% மான விற்பனைக்கு தேவையான

எரிபொருள் குழாய் வழியாகவும் 21% வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் சொந்த கொள்கலன்கள் மூலமும் எடுத்துச் செல்லப்படுகின்றன. 1% மான விற்பனைக்கு தேவையான எரிபொருள் புகையிரத கொள்கலன்கள் மூலமும் மிகுதி 14% வாடிக்கையாளர் தாமாக முனையத்திற்கு வந்து எடுத்துச் செல்லுகின்றனர். நாடு பூராகவுமுள்ள மொத்த கையிருப்பு களஞ்சிய சாலைக்கு விற்பனைக்காக விநியோகிக்கப்படும் எரிபொருளில் 52% வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் சொந்த கொள்கலன் வண்டிகள் மூலமும் 42% வாடகைக்கு அமர்த்தப்பட்ட கொள்கலன் வண்டிகள் மூலமும் மிகுதி 6% வாடிக்கையாளர் தாமாக முனையத்திற்கு வந்தும் எடுத்துச் செல்லுகின்றனர்.

அட்டவணை 3.3 கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் மொத்த கையிருபு விற்பனைகள் – 2017

| உற்பத்திகள் | விநியோக மார்க்கங்கள் | மொத்த கொள்ளளவு (கி.லீ) | மொத்த தொகை (கி.லீ) |
|---|---|---|---|
| பெற்றோல் 92 ஒக்டேன் | Wagon(W) | - | 876,278.70 |
| | CPSTL(C) | 188,377.20 | |
| | Hired(H) | 552,205.50 | |
| | Collection(X) | 135,696.00 | |
| லங்கா ஓட்டோ டீசல் | W | 38,262.87 | 1,472,591.61 |
| | C | 85,008.00 | |
| | H | 826,801.80 | |
| | X | 202,006.20 | |
| | Pipe line(Power plant) | 320,512.74 | |
| லங்கா மண்ணெண்ணெய் மற்றும் தொழிற்சாலை மண்ணெண்ணெய் | C | 11,800.80 | 126,898.20 |
| | H | 99,112.20 | |
| | X | 15,985.20 | |
| லங்கா உலை எண்ணெய் | W | 1,714.05 | 478,436.43 |
| | C | 1,544.40 | |
| | H | 28,142.40 | |
| | X | 85,404.00 | |
| | Pipe line(Power plant) | 361,631.58 | |
| லங்கா சுப்பர் டீசல் | C | 10,098.00 | 104,260.20 |
| | H | 83,424.00 | |
| | X | 10,738.20 | |

| | | | |
|---|---|---|---|
| பெற்றோல் 95 ஒக்டேன் | C | 31,105.80 | 224,598.00 |
| | H | 174,979.20 | |
| | X | 18,513.00 | |
| ஜெட் A-1 | W | - | 5,137.20 |
| | C | 5,137.20 | |
| | H | - | |
| | X | - | |
| மேலதிக மைல் | W | - | 4,270.20 |
| | C | 211.2 | |
| | H | 3,861.00 | |
| | X | 198 | |
| லங்கா சோல்வன் (SBP) | W | - | 811.80 |
| | C | 462 | |
| | H | 349.8 | |
| | X | - | |
| **மொத்தம்** | **W** | **39,976.92** | **3,293,282.34** |
| | **C** | **333,744.60** | |
| | **H** | **1,768,875.90** | |
| | **X** | **468,540.60** | |
| | **Pipe line (Power plant)** | **682,144.32** | |

அட்டவணை 3.4 வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் நாடுபூராகவும் உள்ள மொத்த கையிருபு களஞ்சியசாலைளில் மொத்த கையிருப்பு விற்பனைகள் – 2017

| மொத்த கையிருப்பு களஞ்சியசாலை | விநியோக மார்க்கம் | மொத்த கொள்ளளவு(கி.லீ) | மொத்த தொகை (கி.லீ) |
|---|---|---|---|
| அநுராதபுரம் | CPSTL (C) | 65,194.80 | 185,803.20 |
| | Hired (H) | 98,617.20 | |
| | Collection (X) | 21,991.20 | |
| பதுளை | C | 44,682.00 | 75,939.60 |
| | H | 28,564.80 | |
| | X | 2,692.80 | |
| மட்டக்களப்பு | C | 82,585.80 | 82,618.80 |
| | H | 33.00 | |
| | X | | |

| | | | |
|---|---|---|---|
| காலி | C | 74,877.00 | 154,298.10 |
| | H | 76,121.10 | |
| | X | 3,300.00 | |
| ஹப்புத்தளை | C | 46,737.90 | 64,650.30 |
| | H | 17,912.40 | |
| | X | - | |
| காங்கேசன்துறை | C | 71,953.20 | 74,038.80 |
| | H | 1,999.80 | |
| | X | 85.80 | |
| கொட்டகலை | C | 65,739.30 | 67,343.10 |
| | H | 99.00 | |
| | X | 1,504.80 | |
| குருநாகல் | C | 59,438.77 | 203,015.17 |
| | H | 112,101.00 | |
| | X | 31,475.40 | |
| மாத்தறை | C | 57,710.40 | 184,041.00 |
| | H | 105,362.40 | |
| | X | 20,968.20 | |
| பெரதேனியா | C | 136,666.20 | 205,332.60 |
| | H | 63,703.20 | |
| | X | 4,963.20 | |
| சுரசவி உயன | C | 22,961.32 | 26,320.72 |
| | H | 3,359.40 | |
| | X | - | |
| IRD வவுனியா | C | - | 76,012.20 |
| | H | 76,012.20 | |
| | X | - | |
| **மொத்தம்** | **CPSTL(C)** | **728,546.69** | **1,399,413.59** |
| | **Hired(H)** | **583,885.50** | |
| | **Collection(X)** | **86,981.40** | |

# 4. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்

## 4.1 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகள

ஜனவரி 2015ல் இருந்து எல்லா பெற்றோலியப் பொருட்களுக்கும் சராசரியாக 20% விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டதனால் சடுதியாக கேள்வி அதிகரித்துள்ளதை காணமுடிந்துள்ளது.இதன் அதிகரிப்பினை பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் பெற்றோல் 95 ஒக்டேன் வர்க்கங்களில் மிக முக்கியமாக காணமுடிந்துள்ளது. 2017ம் ஆண்டில் பெற்றோல் 92 ஒக்டேன் விற்பனையை 1,210 மில்லியன் லீற்றராகப் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்துள்ளது. அதுமட்டுமல்லாது 2016ம் ஆண்டை விட 2017ம் ஆண்டு இதன் விற்பனை 7.74% வளர்ச்சியடைந்துள்ளது.


ஹைபிறிட் (Hybrid) வாகனங்களின் பாவனைகள் அதிகரித்துள்ளதால் டீசல் வாகனங்களின் எரிபொருட் சிக்கனங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றது. இதனால் ஓட்டோ டீசலின் கேள்வி மந்த நிலையில் காணப்படுகிறது. எனினும் 2015-2017 காலப்பகுதியில் இதன் கேள்வி சிறு அளவிலேயே அதிகரித்துள்ளதை காணமுடிகின்றது. இது சில்லறை விற்பனையையும் நுகர்வு விற்பனையையும் வெகுவாகப் பாதித்துள்ளது. இந் நாட்டில் 55% க்கும் அதிகமான பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி போக்குவரத்து துறையிலிருந்தே வருகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாடு பூராகவும் விற்பனை செய்துள்ள பெற்றோலிப் பொருட்களின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை 4.1 தரப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாடு பூராகவும் விற்பனை செய்துள்ள பெற்றோலிப் பொருட்கள் – 2015– 2017 ( மெற்றிக் தொன்)

| உற்பத்தி வகைகள் | சில்லறை விற்பனை | | | நுகர்வு விற்பனை | | | மொத்த விற்பனை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 |
| லங்கா பெற்றோல் 92 ஒக்டேன் | 751,466 | 850,105 | 916,426 | 4,809 | 4,793 | 4,594 | 756,275 | 854,898 | 921,020 |
| லங்கா பெற்றோல் 95 ஒக்டேன் | 77,110 | 105,698 | 131,483 | 4,556 | 4,546 | 4,405 | 81,667 | 110,244 | 135,888 |
| லங்கா ஓட்டோ டீசல் | 1,269,120 | 1,322,812 | 1,331,815 | 310,017 | 552,557 | 587,152 | 1,579,137 | 1,875,369 | 1,918,967 |
| லங்கா சுப்பர் டீசல் | 46,583 | 62,962 | 74,656 | 308 | 214 | 147 | 46,891 | 63,177 | 74,803 |
| லங்கா மண்ணெ-ண்ணெய் | 121,680 | 130,954 | 155,074 | 578 | 554 | 542 | 122,258 | 131,508 | 155,616 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| லங்கா கைத்தொழில் மண்ணெ-ண்ணெய | 778 | 586 | 467 | 6,574 | 4,840 | 4,590 | 7,351 | 5,426 | 5,067 |
| லங்கா இரசாயன நெப்தா | | | | 99,227 | 120,187 | 139,303 | 99,227 | 120,187 | 139,303 |
| உலை எண்ணெய் 800 செக் | | | | 235,687 | 504,973 | 472,601 | 235,687 | 504,973 | 472,601 |
| உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்) | | | | 105,249 | 37,384 | 60,879 | 105,249 | 37,384 | 60,879 |
| உலை எண்ணெய் | | | | 13,174 | - | - | 13,174 | - | - |
| உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்) | | | | 57,388 | 83,185 | 240,016 | 57,388 | 83,185 | 240,016 |
| ஜெட் A-1 | | | | 381,008 | 424,741 | 455,680 | 381,008 | 424,741 | 455,680 |
| லங்கா சோல்வன்ட் (SBP) | | | | 1,221 | 884 | 617 | 1,221 | 884 | 617 |
| **மொத்தம்** | **2,266,737** | **2,473,117** | **2,609,930** | **1,219,796** | **1,738,858** | **1,970,526** | **3,486,533** | **4,211,977** | **4,580,457** |

**வரைபு 4.1** **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல்,டீசல் மற்றும் ஜெட் A-1 விற்பனைகள்-2014-2017 (மெ.தொ'000)**



## 4.2 விற்பனை நிலையங்கள்

புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள், தற்போதுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை விட பல்வேறு வசதிகளை கொண்டவையாக அமைந்துள்ளதோடு 2015-2017ம் ஆண்டுகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களின் கிடைப்பனவுகளும் அதிகரித்துள்ளது. மேலும் புதிய நிரப்பு நிலையம் நவீன வசதிகளைக் கொண்டுள்ளதோடு நவீனரக வாகனங்களிவ் எபயோகிக்கும் உயர் ரக எரிபொருளான பெற்றோல் 95 ஒக்டேன் மற்றும் சுப்பர் டீசல் வகைகளை வாடிக்கையாளருக்கு வழங்குகின்றன.2017ம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விபரங்கள் அட்டவணை 4.2ல் காட்டடப்பட்டுள்ளது. அத்துடன் 46 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நாடுபூராகவும் திறப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுமதியளித்துள்ளது.

அட்டவணை 4.2 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களின் விற்பனைகள் – 2017

| இல. | மாகாணம் | 2017ம் ஆண்டு இறுதியில் உள்ளவாறான |
|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | 300 |
| 02 | மத்திய மாகாணம் | 102 |
| 03 | தென் மாகாணம் | 140 |
| 04 | வட மாகாணம் | 182 |
| 05 | கிழக்கு மாகாணம் | 179 |
| 06 | வடமேல் மாகாணம் | 142 |
| 07 | வடமத்திய மாகாணம் | 83 |
| 08 | ஊவா மாகாணம் | 51 |
| 09 | சப்பிரகமுவ மாகாணம் | 75 |
| | மொத்தம் | 1,254 |

## 4.3 சக்தி வலுத் துறைக்கான எரிபொருள் விற்பனை

நிலவும் சராசரி காலநிலை காரணமாக கைத்தொழிற்சாலைக்கான மின்சாரத் தேவை வீட்டுப் பாவனையாளர்களின் தேகைள் காரணமாக கேள்வி அதிகரித்துள்ளது. ஆனால் சக்தி வலுத் துறையில் எந்த வித குறிப்பிடத்தக்கமாற்றங்களும் இக் காலப்பகுதியில் ஏற்படவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானத்தின் சக்தி வலு நிலையங்களுக்கான விற்பனை விபரங்கள் அட்டவணை 4.3ல் காட்டடப்பட்டுள்ளது.

அட்டவணை 4.3 சக்தி வலு நிலையங்களுக்கான விற்பனை 2011– 2017

| ஆண்டு | இலங்கை மின்சார சபை | | | | | | சுதந்திர வலுசக்தி வழங்குனர் | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | லங்கா ஓட்டோ டீசல் | | நெப்தா | | உலை எண்ணெய் | | லங்கா ஓட்டோ டீசல் | | உலை எண்ணெய் | | தொகை (லீற்றர் '000') | பெறுமதி ரூ. மில்லியன் |
| | தொகை (லீற்றர் '000') | பெறுமதி ரூ. மில்லியன் | தொகை (லீற்றர் '000') | பெறுமதி ரூ. மில்லியன் | தொகை (லீற்றர் '000') | பெறுமதி ரூ. மில்லியன் | தொகை (லீற்றர் '000') | பெறுமதி ரூ. மில்லியன் | தொகை (லீற்றர் '000') | பெறுமதி ரூ. மில்லியன் | | |
| 2011 | 184,476 | 14,340 | 67,131 | 4,512 | 202,797 | 8,112 | 171,087 | 14,009 | 772,204 | 33,388 | 1,397,695 | 74,361 |
| 2012 | 251,599 | 27,693 | 89,701 | 7,491 | 203,315 | 12,655 | 213,443 | 21,094 | 881,606 | 57,831 | 1,639,664 | 126,764 |
| 2013 | 39,650 | 4,778 | 104,019 | 9,362 | 153,240 | 12,832 | 28,823 | 3,436 | 401,668 | 33,889 | 727,400 | 64,297 |
| 2014 | 191,105 | 23,113 | 136,091 | 12,248 | 165,423 | 14,992 | 138,579 | 16,828 | 455,518 | 46,653 | 1,086,716 | 113,834 |
| 2015 | 25,511 | 2,438 | 143,879 | 10,735 | 18,461 | 1,522 | 58,589 | 5,647 | 213,249 | 17,214 | 459,689 | 37,556 |
| 2016 | 141,006 | 13,395 | 174,270 | 12,896 | 258,643 | 20,691 | 223,968 | 21,250 | 156,968 | 12,711 | 954,855 | 81,213 |
| 2017 | 249,424 | 23,695 | 201,989 | 14,947 | 269,368 | 21,549 | 147,906 | 14,051 | 432,615 | 34,609 | 1,301,302 | 108,851 |

## 4.4 உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனை

ஹைபிறிட் வாகனங்களின் பாலனை மற்றும் உராய்வு நீக்கி எண்ணெயின் நீண்ட் காலப் பாவனைகளினால் உராய்வு நீக்கி எண்ணெய் சந்தை சடுதியாக சுருங்கியுள்ளது.எனினும் கைத்தொழிற்துறைக்கான உராய்வு நீக்கி எண்ணெய் விநியோகத்தால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது சந்தைப் பங்கினை தக்கவைத்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2011 தொடக்கம் 2017 வரை மேற்கொண்ட உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனை விபரங்கள் அட்டவணை 4.4ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.4 இ.பெ.கூ.த்தின் உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனை 2011– 2017 (கி.லீ)

| ஆண்டு | தொகை (கி.லீ) | பெறுமதி (ரூ.மில்லியன்) |
|---|---|---|
| 2011 | 5,146 | 1,593 |
| 2012 | 5,602 | 1,986 |
| 2013 | 5,520 | 2,086 |
| 2014 | 5,687 | 2,384 |
| 2015 | 5,326 | 2,244 |
| 2016 | 5,445 | 2,296 |
| 2017 | 5,412 | 2,326 |

## 4.5 இரசாயனப் பொருட்களின் விற்பனை

2015ம் ஆண்டு அரசால் Dimethoate, Carbaryl, Chlopyriofs, 3-4 DPA, Glyphosate போன்றன அரசால் தடைசெய்யப்படட்தனால் இரசாயனப் பொருட்களின் விற்பனையில் பாதகமான நிலை காணப்பட்டது.இவ் தடைசெய்யப்பட்ட பொருட்களில் குறிப்பாக Glyphosate 60% உயர் விற்பனைப் புரழ்வினைக் காட்டியது. இரசாயனப் பொருட்களிளுக்கான பிரதான வாடிக்கையாளர் இழப்பால் இந் நிலைமை மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பாதகத்தன்மையினை ஏற்படுத்தியது.

இதனால் 2016ம் ஆண்டில் Abamactine, Pretiachlor மற்றும் Tebuconazole போன்ற புதிய இரசாயனப் பொருட்களின் அறிமுகத்தால் இத் துறையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டு மேலும் புதிய இரசாயனப் பொருட்களின் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2015 தொடக்கம் 2017 வரை இறக்குதி செய்யப்பட்ட இரசாயனப் பொருட்களின் விபரங்கள் அட்டவணை 4.5ல் காட்டப்பட்டுள்ளது

| அட்டவணை 4.5 | இ.பெ.கூ.த்தின் இரசாயனப் பொருட்களின் இறக்குமதிகள் –2015– 2017 | | | |
|---|---|---|---|---|
| உற்பத்திகள் | தொகை | | பெறுமதி (US$) | பெறுமதி – ரூ.மில்லியன் (உள்நாட்டு கொள்வனவு) |
| | லீற்றர் | கி.கி | | |
| **2015** | | | | |
| Glyphosate | 508,000 | - | 171,880 | - |
| Profenophos | 5,000 | - | 28,250 | - |
| Phenthate 50% | 5,000 | - | 37,750 | - |
| M.C.P.A. 60% | 5,000 | - | - | 3.42 |
| **மொத்தம் –2015** | **91,000** | **-** | **237,880** | **3.42** |
| **2016** | | | | |
| B.P.M.C.50% | 10,000 | - | 36,700 | - |
| Acephate 75% | - | 14,400 | 151,200 | - |
| Captan 50% | - | 3,000 | 16,800 | - |
| Diuron 80% | - | 28,000 | 130,200 | - |
| M.C.P.A. 60% | 10,000 | - | - | 7.03 |
| Manocozeb 80% WP | - | 14,000 | 41,300 | - |
| **மொத்தம் – 2016** | **20,000** | **59,400** | **376,200** | **7.03** |
| **2017** | | | | |
| Abamactin | 2,000 | - | - | 5.0 |
| Pretilachor | 3,000 | - | - | 3.3 |
| Tebuconazole | 1,000 | - | - | 2.5 |
| Mancozeb | - | 14,000 | - | 6.5 |
| **மொத்தம் – 2017** | **6,000** | **14,000** | **-** | **17.3** |

## 4.6 விமான எரிபொருள் விற்பனை

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நியைங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்று விமான எரிபொருள் மீள் நிரப்பு முனையங்களை தாபித்து தனது சேவைகளை வழங்கி வருகின்றது.


இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு அரச நிறுவனமாகும்.இது இலங்கையில் தனியுடைமைத் தன்மையில் விமான எரிபொருளினை தனது வாடிக்கையாளருக்கு வழங்கி வருகின்றது. அத்துடன் சர்வதேச தரங்களுக்மைய தனது சேவையினை தொடர்ச்சியாக தடங்கலில்லாது தனது வாடிக்கையாளருக்கு வழங்கி வருகின்றது. விமான எரிபொருள் மீள் நிரப்பலுக்கு உயர்ந்த முக்கயத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் நிலத்திலும் பார்க்க வானத்திலேயே அதிக பாதுகாப்பு அவசியமாக உள்ளது.இதனால உலகம் பூராகவும் இதற்கு அதிக முக்கித்தும் அளிக்கப்பட்டுள்ளது.

விமான எரிபொருள் மீள் நிரப்புத் துறை பராமரிப்பு, உயர்ந்த தரத்தினை

உறுதிப்படுத்தல், தரக் கட்டுப்பாடு போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதன் வழங்கல் சேவையை எரிபொருள் தரத்திற்கு அதிக முக்கியத்தும் கொடுத்துள்ளதோடு இதற்கான வழங்கற்சங்கிலியையும் உறுதியாகப் பேணிவருகின்றது. வாடிக்கையாளர் விமானங்களின் கூட்டு பரிசோனை குழு, இலங்கை சிவில் விமான அதிகார சபை, சர்வதேச விமான போக்குவரத்துச் சங்கம் மற்றும் சர்வதேச சிவில் விமான நிறுவனம் போன்றவற்றின் வருடாந்த கணக்காய்வினால் இதன் வசதிகள் பரிசோதனையிடப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை விமானசேவை வரலாற்றில் முதன் முறையாக 27 வருடங்களிற்கு பின்பு கடந்த 2014 மற்றும் 2015ம் ஆண்டுகளில் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலைய விமான எரிபொருள் மீள் நிரப்பு முனையத்தில் “நன்று” (சராசரிக்கு மேலாக) என்ற சான்றிதழை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வரைபு 4.2 விமான எரிபொருள் விற்பனை வருமானம் (ஜெட் A-1) 2011-2017 (ரூ.மில்லியன்)




இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 50 விமான வாடிக்கையாளருக்கும் உலகம் பூராகவும் உள்ள மூன்றாம் நபர் கம்பனிகளுக்கும் சராசரியாக 1.6 மில்லியன் லீற்றர் எரிபொருளினை நாளொன்றுக்கு விற்பனை செய்துள்ளது.இவ்வாறு விற்பனை செய்துள்ள மிக முக்கிய விமான வாடிக்கையாளர்கள் வருமாறு.


- இலங்கை விமானங்கள் - விமான சேவை வாடிக்கையாளர்
- எமிரேட்ஸ் - விமான சேவைவ் வாடிக்கையாளர்
- துருக்கிய விமானங்கள் விமான சேவை வாடிக்கையாளர்
- சவுதி அரேபிய விமானங்கள் விமான சேவை வாடிக்கையாளர்
- ஏர் அரேபியா-விமான சேவை வாடிக்கையாளர் (பட்ஜெட் விமான
- சரக்கு ஏர் வாடகை விமானம்-மூன்றாம் தரப்பு நபர் .
- ஓமான் எயர் விமான சேவை வாடிக்கையாளர்

- ஜேட்ரெக்ஸ் விமானம் ஆதரவு - மூன்றாம் தரப்பு நபர்
- ஏஸ்டர் ஜெட் தனியார் விமான சேவை-மூன்றாம் தரப்பு நபர்
- மூன் ஜெட் விமான சேவை-மூன்றாம் தரப்பு நபர்
- தாய் விமான சேவை-விமான சேவை வாடிக்கையாளர்
- ஊவர்-மூன்றாம் தரப்பு நபர்
- ENOC - மூன்றாம் தரப்பு நபர்
- விமான போக்குவரத்து சேவை முகாமைத்துவம் - மூன்றாம் தரப்பு நபர்
- குவைத் விமானங்கள் - விமான சேவை் வாடிக்கையாளர்
- உலக எரிபொருள் சேவை - மூன்றாம் தரப்பு நபர்
- கட்டார் விமானங்கள் - விமான சேவை வாடிக்கையாளர்.
- ஹதித் எரிபொருள் செயற்பாட்டுத் திணைக்களம் - மூன்றாம் தரப்பு நபர்
- ஸ்பைஸ்ஜெட் - விமான சேவை வாடிக்கையாளர்
- மிஹின் லங்கா - விமான சேவை வாடிக்கையாளர்
- ஒறோறா விமான சேவை-மூன்றாம் தரப்பு நபர்
- றொட்டானா- விமான சேவை வாடிக்கையாளர்
- ஐக்கிய விமான சேவை-மூன்றாம் தரப்பு நபர்

## 4.7 சுத்திகரிப்பு நிலைய உற்பத்திப் பொருட்கள

சுப்புகஸ்கந்தையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான சுத்திகரிப்பு நிலையம் நாட்டிற்கு தேவையான பெற்றோலிய எண்ணெயத் தேவையில் மூன்றிலொரு பங்கினை பங்களிப்புச் செய்கின்றது. 2005-2017 வரையில் சுப்புகஸ்கந்தையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகளை அட்டவணை 4.6உம் 2017ம் ஆண்டு சத்திகரிப்பு உற்பத்திகளின் சதவீதத்தினை வரைபு 4.3 இதன் சதவீதத்தினைக் காட்டுகின்றது.

வரைபு 4.3 சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகள் (சதவீதம்) – 2017



## அட்டவணை 4.6 சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகள் 2005 – 2017 (மெ.தொ)

| ஆண்டு | மசகு எண்ணெய் உள்ளீடு | வெளியீடு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெற்றோல் | ஓடோ டீசல் | சுப்பர் டீசல் | உலை எண்ணெய் | | | | | மண்ணெண. ணெய் | இரசாயண நெப்தா | தார் | திரவ பெற்றோலிய வாயு | ஜெட் A-1 | சோல்வன் | மொத்த வெளியீடு |
| | | | | | 500 sec | 800 sec | 1000 sec | 1500 sec | 3500 sec | | | | | | | |
| 2005 | 1,977,751 | 160,684 | 571,169 | 7,190 | 20,580 | 37,40 | 68,05 | 336,271 | 236,749 | 142,092 | 113,308 | 51,785 | 13,047 | 113,831 | 4,044 | 1,876,212 |
| 2006 | 2,140,132 | 193,585 | 628,210 | - | 16,51 | 35,135 | 88,063 | 372,985 | 253,533 | 143,930 | 109,175 | 55,386 | 14,721 | 130,926 | 5,878 | 2,048,037 |
| 2007 | 1,899,078 | 163,291 | 444,593 | - | - | 100,934 | 4,505 | 393,850 | 272,380 | 97,409 | 91,768 | 35,197 | 16,237 | 171,043 | 4,559 | 1,795,766 |
| 2008 | 1,868,346 | 163,702 | 451,132 | - | - | 18,801 | - | 468,002 | 244,402 | 111,133 | 100,416 | 45,450 | 16,208 | 154,433 | 2,562 | 1,776,241 |
| 2009 | 2,014,850 | 179,096 | 485,302 | - | - | 35,901 | - | 462,577 | 282,048 | 82,513 | 105,159 | 41,588 | 24,348 | 195,406 | 972 | 1,894,910 |
| 2010 | 1,752,715 | 157,972 | 441,545 | - | - | 47,918 | - | 396,034 | 241,930 | 92,775 | 84,289 | 34,945 | 22,927 | 126,407 | 2,734 | 1,649,474 |
| 2011 | 2,003,561 | 206,466 | 501,122 | - | - | 54,283 | - | 480,854 | 244,758 | 92,924 | 80,011 | 46,062 | 24,150 | 155,357 | 3,814 | 1,889,766 |
| 2012 | 1,596,059 | 151,536 | 394,161 | - | - | 66,953 | - | 364,607 | 217,240 | 74,909 | 69,841 | 26,548 | 17,437 | 93,159 | 3,699 | 1,480,090 |
| 2013 | 1,643,218 | 143,959 | 389,717 | - | - | 56,011 | - | 521,224 | 146,550 | 57,297 | 86,505 | 5,025 | 22,168 | 124,544 | 2,987 | 1,555,979 |
| 2014 | 1,760,170 | 152,261 | 495,983 | - | - | 52,011 | - | 419,579 | 169,037 | 65,195 | 120,116 | - | 28,116 | 168,481 | 2,514 | 1,673,293 |
| 2015 | 1,765,466 | 165,148 | 532,555 | - | 11,373 | 344,156 | - | 204,847 | - | 78,360 | 148,247 | - | 10,457 | 164,314 | 1,594 | 1,661,051 |
| 2016 | 1,746,180 | 165,782 | 578,657 | - | - | 478,901 | - | - | - | 104,244 | 154,467 | - | 8,837 | 147,525 | 635 | 1,639,047 |
| 2017 | 1,646,041 | 164,564 | 506,046 | - | - | 431,524 | - | - | - | 59,782 | 141,688 | - | 19,416 | 236,360 | 619 | 1,559,999 |

# 5. உட்கட்டுமான அபிவிருத்திகள்

## 5.1 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(அ) சப்புகஸ்கந்தை தாங்கிப் பண்ணையில் புதிய தானியங்கி தாங்கிப் முறையை அமைத்தல்**

சப்புகஸ்கந்தை தாங்கிப் பண்ணையில், இருக்கும் மென்பொருள் மற்றும் அதனோடு தொடர்புடைய உபகரணங்கள் தற்பொழுது வழக்கொழிந்துவருகின்றன இதனால் தானியங்கி தாங்கிப் முறையை விருத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2017, 04வது காலாண்டுப் பகுதியில் முனையத்தின் தானியங்கியை நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் பூர்த்தியடைந்துள்ளது. தற்போது தள ஏற்றுக்கொள்ளல் பரிசோதனைகள் (site acceptance test) நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**(ஆ)சுத்திகரிப்பு நிலையத்தில் புதிய நீராவி கொதிகலனை நிறுவுதல்**

இத் திட்டம் பழைய கொதிகலனுக்கு பதிலாக செயல்முறை நீராவி சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நம்பகத்தன்மையை அதிகரிகும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.இவ் கொதிகலன் கேள்வி ஒப்பந்தம் இத்தாலியக் கம்பனியான ருத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளதோடு இவ் கொதிகலன் உருவாக்கம் பூர்த்தியடைந்த நிலையில் வழங்குனரின் களஞ்சியசாலையான இத்தாலியில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது இக் கொதிகலனின் செயற்படுத்தல் தன்மைகள் ருத் நிறுவனத்தின் பிரதிநிதிகளால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு இதன் செயற்படுத்தல் பரிசோதனைகள் 2017ம் ஆண்டின் இறுதியில் தொடங்கப்பட்டன.

**(இ) சுத்திகரிப்பு ஆலையில் ஒரு மோட்டார் ஏர் கம்ப்ரசர் நிறுவுதல்**

இத் திட்டத்தின் நோக்கமானது சுத்திகரிப்பு நிலையத்தின் விரிவான செயற்பாடுகளுக்கு இவ் வாயு உபகரணத்தின் (Air System) மூலம் நம்பகத்தன்மையினை அதிகரித்தல். ஏர் கம்ப்ரசருக்கத் தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றம் உதிரிப்பாகங்களுக்கான கொள்வனவுக்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஏர் கம்ப்ரசருக்கத் தேவையான அடித்தளம் மற்றும் இதற்குத் தேவையான அறை வேறு தனியான கேள்வி மனு மூலம் நிர்மானிக்கப்படும்.அத்துடன் ஏர் கம்ப்ரசர் தொகுதி வெற்றிகரமான முறையில் 2017,02வது காலாண்டில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

**(ஈ) சுத்திகரிப்பு நிலையத்தின் மசகு எண்ணெய் வடிகட்டல் பகுதி, வாயு எண்ணெய் ஹைட்ரோ – ட்ரீட்டர் பகுதி மற்றும் உலை மற்றும் இயங்குதளத்தினை (Reactor & Platformer) மாற்றுதல்**

செயற்பாட்டு சிரமங்கள் மற்றும் இயந்திர கையாளுகையால் எழும் ஆபத்துக்களைக் குறைத்து குறைந்த தொழிநுட்ப வசதிகளுடன் சுத்திகரிப்பு நிலையத்தின் வெளியீடுகளை அதிகரித்து அதிக இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கான முகப்பு இறுதி பொறியியல் வரைபை

(Front End Engineering Design) வரைவதற்கு பொருத்தமான நபரை தெரிவுசெய்வதற்கான விருப்பத்திற்கான வெளிப்பாடுகள் (Expression of Interest) கோரப்பட்டுள்ளன.இவ் முகப்பு இறுதி பொறியியல் வரைபிற்கான கற்கையை முன்னெடுப்படுப்பதற்கு அனுமதிப்பத்திரம் உடைய தகுதிவாய்ந்த இரு நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. முகப்பு இறுதி பொறியியல் வரைபிற்கான கற்கையை முன்னெடுப்படுப்பதற்கான கேள்வி மனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இதற்கான ஒப்புதல்கள் ஆமைச்சவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவிடம் (CAPC) இருந்து பெறப்பட்டு அனுமதிப்பத்திரதாரர்களை தெரிவுசெய்வதற்கு அனுப்பப்ப-ட்டுள்ளது. இதற்கான முன்னோடி கேள்வி மனுக் கூட்டம் 2017.11.15ம் திகதி நடைபெற்றுள்ளதோடு இதில் ஒரு நிறுவனம் மட்டுமே பங்குபற்றியிருந்தது.இக் கூட்டத்தில் கேள்வி மனுவை சமர்ப்பிப்பதற்கான கால எல்லையை நீடிக்குமாறு இக் கூட்டத்தில் பங்குபற்றிய நிறுவனத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதோடு இவரால் முகப்பு இறுதி பொறியியல் வரைபிற்கான கற்கையும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.இதற்கிணங்க கேள்வி மனுவை சமர்ப்பிப்பதற்கான கால எல்லை 2018.03.31ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்கான வேலைகள் இன்னும் செயற்பாட்டு நிலையில் உள்ளன.

## 5.2 வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம்

**(அ) கொலன்னாவையில் உள்ள வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையத்தில் கண்காணிப்பு கமராவினை (CCTV) நிறுவுதல்**

பாதுகாப்பு பிரதேசத்தினை பொறுத்தவரையில் இவ் இடம் மிக முக்கிய கேந்திர நிலையமாக விளங்குகின்னறது.இதன் காரணமாக இப் பிரதேசம் கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் கணினி மூலம் கண்காணிப்பது அவசியமானதொன்றாக உள்ளது.அத்துடன் இக் கமராக்கள் மூலம் பெறப்படும் தரவுகளை சேமித்து வைப்பது தடயவியல் நிபுணர்களுக்கு மிகவும் பயன்மிக்கதாக அமையும்.மேலும் இங்குள்ள தாங்கிப் பண்ணைகள்,உந்து சக்தி நிலையங்கள் மற்றும் பிற பிரதான நியைங்களை இவ் கண்காணிப்புக் கமராக்கள் மூலம் கண்காணிப்பது அவசியமானதொன்றாகும்.ஏனெனில் இதன் மூலம் பெறப்படும் தரவுகள் தடயவியல் நிபுணர்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பதனாலாகும்.ஆகவே நம்பகத் தன்மை மிக்க கண்காணிப்புக் கமராக்களை கொலன்னாவை எண்ணெய்க் களஞ்சிய நிலையத்தில் பொருத்துவது சாலச்சிறந்ததாகும். ஆரம்ப கட்ட மதிப்பீடுகளின் படி இவ் எண்ணெய்க் களஞ்சிய நிலையத்தில் 66 கண்காணிப்புக் கமராக்களை பொருத்துவது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

66 வெவ்வேறு வகையான கமராக்கள், கண்ணாடி இழையுடன் கூடிய பிரதான சேமிப்புத் தொகுதி (SERVER) மற்றும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களை பொருத்துவதற்கு ஆகும் மொத்தச் செலவினம் கிட்டத்தட்ட ரூ.50 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. REFID

முறை விண்ணப்பத்தினை உள்ளடக்கி திட்டத்தின் முறைமையை மாற்றம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இதகு பொருத்தமான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு இதற்கான கேள்வி மனுக்கள் பெற்றுக்கொள்ளும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**(ஆ) தற்போது அநுராதபுரத்தில் அமைந்துள்ள மொத்த கையிருப்பு களஞ்சியத்தினை அபிவிருத்தி செய்தல்**

அநுராதபுரத்திலுள்ள மொாத்த கையிருப்பு களஞ்சிய நிலையத்தினை நவீனமயப்படுத்தி எதிர்காலத்தில் எரிபொருள் சேமிப்பு திறன் மற்றும் எரிபொருன் நிரப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு உந்து சக்தி நிலையம் அதனோடு இணைந்த குழாய்த் தொகுதிகள் மற்றும் தீயணைப்புத் தொகுதிகளை புத்தாக்கப்படுத்துவதோடு நிர்வாகக் கட்டடம் மற்றும் ஓய்வு அறைகளை தகுந்த இடத்திற்கு மாற்றுவது அவசியமானதாக உள்ளது. இதற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.300 மில்லியன்கள் ஆகும்

இதற்கான மண் பரிசோதனைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இவ் அகழ்வுகளுக்கு தொல்பொருளியல் திணைக்களத்திடமிருந்து ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளன.இப் பணிக்கு தேவையான கேள்வி மனுக்கள் பெறப்பட்டு மதிப்பீடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்துடன் தற்போதுள்ள காணி முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு போதுமானதாகக் காணப்படாததுடன் இலங்கை புகையிரதத்திற்குச் சொந்தமான 4 ஏக்கர் காணியினைப் பெறறுக்கொள்ளவதற்கு கலந்துரையாடல்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.இதனால் காணியினை பெற்றுக்கொள்ளும் பிரச்சினைகள் காரணமாக இத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

**(இ) CPSTL முத்துராஜவல முனையத்தின் சிவில் வேலைகள்**

500 மெற்றிக் தொன் கொண்ட மூன்று பெற்றோலியப் பொருட்களான டீசல்,உலை எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெயை விநியோகிப்பதை நோக்காகக் கொண்டு 52 உத்தியோகத்தர்களுடன் 2004ம் ஆண்டு CPSTL முத்துராஜவெல முனையமானது உருவாக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருளுக்கான கேள்வி அதிகரிப்பினால் இம் மூன்று பொருட்களுடன் சேர்த்து மேலதிகமாக பெற்றோல் விநியோகமும் இம் முனையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இம் முனையத்தின் விநியோகத் திறன் 6,000 மெற்றிக் தொன்களாக அதிகரித்துள்ளதோடு உத்தியோகதர்கள் எண்ணிக்கையும் 272 ஆக உயர்ந்துள்ளது.இதனால் முத்துராஜவெல முனையத்தில் தற்போதுள்ள விநியோத் திறனை தடையில்லாது பேணுவதற்கு உட்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசிய நிலைமை ஏற்பட்டுள்ளது.இத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.182மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இத் திட்ட காலம் ஒரு வருடமாகும்.

இதற்கான நிபுணர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன் இதற்கான கேள்வி மனுக்களும் கோரப்பட்டுள்ளன. இதற்காக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,

முத்துராஜவல முனையத்தோடு இணைந்த 3 ஏக்கர் காணியினை ஒதுக்குவதற்கு இணங்கியுள்ளதோடு இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன ஊழியர்களுடன் இணைந்த வகையில் கூட்டு மேற்பார்வைக்கு முன்னெடுக்கப்பட்டது.

(ஈ) **வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் வழங்கல் கொண்ட அதி நவீன வசதிகளைக் கொண்ட (Start-of -the art) பெட்ரோலிய ஆய்வுகூடத்தை கொலன்னாவ நிறுவல்**

CPSTLல் தற்போதுள்ள ஆய்வு கூடம் ஷெல் கம்பனியால் 1962ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டதாகும். சுகாதாரம்,பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் போன்றவற்றினைக் கருத்தில் கொண்டு தற்போதய நியமங்களுக்கேற்பவும் பரிசோதனைச் செயற்பாடுகளுக்கும் சில கட்டடங்களைத் தவிர எனைய கட்டடங்கள் மற்றும் ஆய்வுகூடங்களை நவீனமயப்படுத்தப்படல் வேண்டும். தற்போதய நவீன ஆய்வுகூடங்களோடு ஒப்பிடும் போது இங்குள்ள ஆய்வு கூட உபகரணங்கள் மிகவும் பழமை வாய்ந்ததாகும்.

இவ் உத்தேச ஆய்வுகூட கட்டட நிர்மானத்தின் நோக்கம் தற்போதய நவீன தொழிநுட்டபம் மற்றும் அதி நவீன உபகரணங்கள் மூலம் துல்லியமானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையினை நுகர்வோருக்கு வழங்குவதாகும். இத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.625மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.இத் திட்டத்தின் கால எல்லை 08 மாதங்களாகும்.இத் திட்ட கொள்வனவுக்கான கேள்வி மனுக்கள் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

(உ) **புதிய 15,000M$^3$ கொள்ளளவு கொண்ட பெற்றோல் சேமிப்புத் தாங்கியை கொலன்னாவை முனையத்தில் அமைத்தல்**

கொலன்னாவை முனையத்தில் பெற்றோலுக்கான சேமிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் புதிய 15,000m$^3$ கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புத் தாங்கியை அவசரமாக நிர்மானிக்க வேண்டியுள்ளது. இலங்கையில் பெற்றோலுக்கான கேள்வி வருடாந்தம் சராசரியாக 5% அதிகரிக்கின்றது.இதனால் நாட்டில் தடையில்லாத எரிபொருள் வழங்கல் செயற்பாட்டினை பேணுவதற்கு பெற்றோலுக்கான போதுமானளவு சேமிப்பு வசதிகள் இருப்பது அவசியமாகும்.இவ் உத்தேச திட்ட நிர்மானத்திற்கான காலம் 18 மாதங்களாகும். இத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ. 495மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான கேள்வி மனுக்கள் ICBமுறையின் அடிப்படையில் பெறப்பட்டு இவ் ஒப்பந்தமானது M/s Indo East Engineering & Construction (Lanka) தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டமானது 2018ம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஊ) **12” விட்டமுள்ள குழாய்த் தொகுதியினை வீதி, புகையிரதக் கடவை மற்றும் மகாவத்தையில் நிறுவுதல்**

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையத்தால் கிடங்கினுள் குழாய்கள்

வெளியே தெரியும் முறையில் 12" விட்டமுள்ள குழாய்த் தொகுதிகள் கொழும்புத்துறைமுகத்தின் உட்பகுதியிலுள்ள தெற்கு இறங்கு துறையிலிருந்து கொலன்னாவை முனையம் வரையான 2,471 மீற்றர்(மொத்த நீளம் 6,166 மீற்றர்) நீளத்திற்கு புத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.மிகுதித் தூரமான 3,111 மீற்றர் கிடங்கினுள் குழாய்கள் வெளியே தெரியும் முறையினைப் பயன்படுத்தி புதிய குழாய்கள் மூலம் மாற்றீடு செய்யப்படும். இதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையத்தின் களஞ்சியசாலையிலிருந்து புதிய குழாய்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.600மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இத் திட்டத்திற்கான காலம் 04 மாதங்களாக முன்மொழியப்பட்டுள்ளது. இத் திட்ட கொள்வனவுகளுக்காக CAPC மற்றும் TEC குழுக்களை நியமிக்கும் செயற்பாடுகள் நடைபெற்ற வண்ணமுள்ளன.

(எ) **CPSTL தரவு மையத்திற்கான அனர்த்த மீட்பு மற்றும் முகாமைத்துவ மத்திய நிலையம் (DRMC)**

CPSTL க்கான DRMC திட்டத்தின் நோக்கம் 24x7 ERP முறைச் செயற்பாடுகளைப் பின்பற்றும் CPSTL, CPC மற்றும் LIOC யின் வருடாந்த வர்த்தகச் செயற்பாடுகளில் தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தும் இடையூறுகளாலோ CPSTLன் தரவு மையத்திற்கு பேரழிவுகள் ஏற்படும் போது DRMC மூலம் பாதுகாப்பினை ஏற்படுத்தலாகும்.இம் மூன்று நிறுவனங்களும் இம் முறையினைக் கடைப்பிடிக்காமல் தங்களது வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதென்பது கடினமான விடயமாகும்.இத் திட்டமானது ஆரம்ப தரவு நிலையத்திலுள்ள வன்பொருட்களை (Hardware) மேம்படுத்துதல், தற்போதுள்ள மத்திய தரவு மையத்திற்கு (server) புதிய வன்பொருட்கள் மூலம் மென்பொருட்களை மாற்றுதல் மற்றும் DRMC திட்டத்திற்கு கேள்வி கோரல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வலைப்பின்னல் தளத்திற்கு வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை இற்றைப்படுத்தல் என்பனவாகும். இத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.260மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.இத் திட்டத்திற்கான கால எல்லை 06 மாதங்கள் ஆகும். வெற்றிகரமான கேள்வி மனுதாரருக்கு இத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது.இத் திட்ட வேலைகள் தற்போது இறுதி நிலையை எட்டியுள்ளது.

# 6. பெற்றோலிய அகழ்வு மற்றும் அபிவிருத்தி

## 6.1 கிழக்கு கரையோர கூட்டுக்கல்வி (JS 5 மற்றும் JS 6 துண்டங்கள்)

எண்ணெய் மற்றும் வாயு அகழ்வில் இலங்கை வரலாற்று மைல் கல்லை அடைந்து கொள்வதற்காக இலங்கையின கிழக்கு கரையோரத்திற்கு அப்பாலுள்ள நீர்ப் பகுதியில் (JS 5 மற்றும் JS 6 துண்டங்களில்) அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக இலங்கை அரசு 2016.02.18ம் திகதி French super-major Total E & P Petroliers Activities நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றினை செய்துகொண்டது. Eastern Eco DMCC நிறுவனமானது TOTAL'S பல தரப்பட்ட தரவுககளைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனமாக உள்ளதோடு TOTAL'S சார்பில் கூட்டுக் கற்கை பகுதி உள்ளடக்கிய வகையில் 2D தரவுகளை சேகரித்துள்ளது. Eastern Eco DMCC பல் வாடிக்கையாளர் உடன்படிக்கையை கைச்சாத்திட காலம் தாழ்த்தப்பட்டதால் இத் திட்டம் 2017ம் ஆண்டில் ஆரம்பிக்கப்படாததுடன் 2018ம் ஆண்டு மே மாதத்தில் பல் தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திட்டதும் புவியீர்ப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும்.

## 6.2 இயற்கை வாயுவை வர்த்தக மயப்படுத்தல் (மன்னார் கடற்படுக்கையிலுள்ள M2 துண்டம்)

IHS Global உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச்சாரம் வெற்றிகரமான 2017ம் ஆண்டில் முடிவடைந்துள்ளதோடு சிறிய கேள்வி மனு சுற்றுக்கான (Mini bid round) கேள்வி மனு ஆவணங்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள் இறுதி நிலையில் உள்ளன. மன்னார் கடற்படுக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரு இயற்கை வாயுப் படிமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இதனோடிணைந்த மேலதிக அபிவிருத்தி செய்தல் மற்றும் உற்பத்தி செய்தல் மற்றும் இதனோடிணைந்த, மேலதிக அபிவிருத்தி மற்றும் அகழ்வுப்பணிகளுக்காக பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கான M2சிறிய கேள்வி மனுச்சுற்று 2018ம் ஆண்டு மே மாதத்தில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. Dorado லில் கண்டுபிடிக்கப்பட்ட் இயற்கை வாயுவின் மூலம் 630Mw வலுவுள்ள சக்தி வலுநிலையங்களுக்கு 10 வருடங்களிற்கு சக்தி வலுவினை வழங்கமுடியும். நுரைச்சோலை நிலக்கரி சக்தி வலு நிலயத்திற்கு அருகில் 300Mw சக்தி வலுவினைக் கொண்ட இயற்கை வாயுவைப் பயன்படுத்தி சக்தி வலுவைப் பிறப்பிக்கும் சக்தி வலு நிலையத்தை நிறுவும் நீண்டகாலத் திட்டத்திற்கு பச்சை சமிக்கை காட்டப்பட்டுள்ளதுடன் அதற்கான நிதியியல் சாத்தியப்பாடும் முன்மொழியப்பட்டுள்ளன. இத்திட்டப்பகுதி னுழசயனழ படிமப்பகுதியில் இருந்து 40 கி.மீ தூரத்திலேயே உள்ளது. இவ் சுதேச சக்திவளத்தில் நீண்டகாலத்தேவைகள் உணரப்பட்டு இவ் வளமாக விநியோகிக்கப்பட்டு இதனை பயன்படுத்தும் காலம் வெகு தொலைவிலில்லை. எண்ணெய் மற்றும் வாயு வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான அகழ்வு மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கேள்வி மனுச் சுற்று ஊடாக M2 பகுதியில் மேலதிக அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு பொருத்தமான முதலீட்டாளரை தெரிவு செய்யும் பணிகளை ஊக்குவிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

## 6.3 காவிரி C2 மற்றும் C3 துண்டங்களில் எண்ணெய் அகழ்வுகள்

Bona Vista வில் நிதியீட்டம் செய்யக்கூடிய பங்குதாரரை கண்டுபிடிப்பதற்கான 12 மாத கால எல்லையானது 2017.12.31ம் திகதியுடன்

முடிவடைந்தமையால் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி குழு(PRDC) மேலும் 06 மாதகாலத்திற்கு நீடிப்புச் செய்வதற்கு அனுமதியளித்துள்ளது.எவ்வாறாகினும் 2018ம் ஆண்டில் இத் திட்டம் தொடருமென பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இத் திட்டத்திற்கான மொத்த முதலீடு கிட்டத்தட்ட US$ 35 மில்லியன்கள் ஆகும். இத் திட்டத்தில் பல படிமக் கிணறுகளைத் தோண்டுதல், ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்திற்கு 2D புவியீர்ப்புத் தரவுகளை பெற்றுக்கொள்ளல் என்பனவாகும்.இதன் ஒப்பந்தக் காலம் 08 வருடங்கள் ஆகும்.

## 6.4 ஸ்க்லம்பெர்கர் (Schlumberger) UmberellaMulti-Client தரவுகளை கையகப்படுத்தும் திட்டம்

இலங்கை அரசாங்கம் Easter Echo DMCC நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் 2017ம் ஆண்டில் கைச்சாத்திட இருந்தபோதும், தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட கோலாறுகளால் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. கரைகடந்த எண்ணெய் வாயுச்சேவையில் முன்னோடி நிறுவனமான ளுஉாடரஅடிநசபநச நிருவனத்தின் முதன்மை துணை நிறுவனமான Umberella multi-client survey உடனான Easter Echo DMCC உடன் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. தற்போது கௌரவ சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஏற்கெனவே பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் சிபார்சுகளின் அடிப்படையில் பேரம் பேசப்பட்ட செயற்பாடுகள் இறுதி நிலையில் உள்ளதுடன் இவ் ஒப்பந்தம் 2018ம் ஆண்டு மே முற்பகுதியில் கைச்சாத்திடப்படும். இலங்கையில் கரைகடந்த பகுதியில் இருந்து எணணெய் வளத்தினை எடுக்கும் போதும் மற்றும் எண்ணெய் அகழ்வில் முதலீடு செய்யும் போது ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் ஆபத்தினைக் குறைப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

## 6.5 M1 மற்றும் C1 துண்டங்களில் பெற்றோலிய அகழ்வுச் செயற்பாடுகள்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் மற்றும் வெளிநாட்டு புவியியல் விஞ்ஞான நிபுணர்கள் மேற்கொண்ட மாதிரி ஆய்வுகளின் படி M1 மற்றும் C1 துண்டங்களில் குறிப்பிட்த்தக்க எண்ணெய்ப் படிமங்களை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதேவேளை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் Serendive Energy தனியார் கம்பனியிடமிருந்து M1 மற்றும் C1 துண்டங்களில் அகழ்வுப்பணிகளை மேற்கொள்ள முன்மொழிவைப் பெற்றுள்ளது. இம் முன்மொழிவுகளுக்கான ஆரம்பகட்ட மதிப்பீடுகள் அதிக போட்டித்தன்மை கொண்டதாகவும் விரிவானதாகவும் இருக்கும்.ஆகவே, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம் பேசும் குழு (CANC) மற்றும் திட்டக் குழுவின் மேலதிக பேரம் பேசல் மற்றும் மதிப்பீடுகளின் பின்பு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் Serandive Energy தனியார் கம்பனியுடன் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் ஈடுபடும். அத்துடன் M1 மற்றும் C1 துண்டங்களில் அகழ்வுப்பணிகளை மேற்கொள்ள 2018ம் ஆண்டு யூன் மாதமளவில் வழங்கப்படும். இது இலங்கையின் ஹைட்ரோகாபன் அகழ்வு வரலாற்றில் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் 2வது தடவையாக வெற்றிகரமாக ஈடுபடும் நவீன சகாப்தமாக விளங்கும்.

## 6.6 கடல் சுற்றுச்சூழல் பேஸ்லைன் சர்வே (MEBS)

கடலோர சுற்றாடல் கடற்படுக்கை கற்கை நெறியினை இலங்கையில் மேற்கொள்வதற்கு ஏதுவாக நாடுபூராகவும் உள்ள கடலோர சுற்றாடல் கடற்படுக்கைத் தரவுகளை சேகரிப்பதந்கு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம், தேசிய நீரியல் ஆய்வு மற்றும் முகவருடன் (NARA)

இணைந்து MEBS திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. பெற்றோலிய வள அகழ்வினை ஆரம்பிப்பதற்கு முன்பு இதனால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கத்தினை மதிப்பீடு (EIA) செய்தல் வேண்டும். NARA ஏற்கெனவே இத்திட்டத்தனை பூர்த்திசெய்துள்ளதோடு, MEBS இணையத்தளமும் 2018ம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தரவுத்தளத்தினூடாக இலங்கை நீர்ப்பரப்பில் ஹைட்ரோகாபன் அகழ்வுகளில் ஈடுபடும் எந்த நிறுவனமும் தனக்குத்தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. எவ்வாறாகினும் தற்போதுள்ள உயர்தொழில்நுட்பம் மூலம், முதலீட்டாளர்கள் இதற்கான அனுமதிப்பத்திரத்தை அதிவிரைவாக பெற்றுக்கொள்வதோடு, அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

## 6.7 ஈர்ப்பு / Gradiometry மற்றும் காந்த தரவு கையகப்படுத்துதல் ஆய்வுகள்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு முன்மொழிவுகளையும் மதிப்பீடு செய்த பின்பு 2017ம் ஆண்டில் மேற்கூறப்பட்ட ஆய்விற்கான புதிய முன்மொழிவை சர்வதேச ரீதியாக பெற்றுக்கொள்வதற்காக மீளவும் விளம்பரத்தினை பிரசுரிப்பதற்காக CANC தீர்மானித்துள்ளது. ஆகவே, 2018.01.03ம் திகதி உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக மீளவும் விளம்பரத்தினை பிரசுரிப்பதற்கு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் மற்றும் திட்டக்குழு நடவடிக்கை எடுத்திருந்தன. புவியீர்ப்பு மற்றும் காந்தப்புல ஆய்வு களுக்கான கடற்படுக்கை பிரதேசங்களாக யாழப்பாணம், அண்டிகம, தப்போவ மற்றும் மேலதிகமாக இப்பிரதேச கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பகுதியும் உள்ளடங்கும். ஆகவே, உலகில், மேல்நிலை மற்றும் வாயு தொழிற்துறைகளில் சிரமமான நிலைகள் எற்படும் போது இலங்கையில் இப் பன்முகப்பட்ட தந்திரோபாயங்கள், இலங்கைக்கு மேலதிகமாக முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு இவை பேருதவியாகக் காணப்படுகின்றன.

## 7. பிளாஸ்டிக் கழிவுகளை எரிபொருளாக மாற்றுதல்

பெப்ரவரி 2009 இல் மத்திய சுற்றாடல் அதிகார சபை, மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் திரு. ஆனந்த விதானகே, ஆலை கண்டுபிடிப்பாளர்களுக்கு இடையில் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ், பிளாஸ்டிக் கழிவுகளை எரிபொருளாக மாற்றும் இவ் ஆலை நிறுவப்பட்டது. முதலாவது தொகுதி அரை வணிக ரீதியான ஆலை (semi commercial plant) 2014.05.07ம் திகதி பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்யப்பட்டது.அத்துடன் இத் தொழிநுட்பத்துடன் கூடிய இயந்திரம் உலகின் எப்பகுதியிலும் காணப்படாததால் இவ் இயந்திரத்தால் இவ் மாற்றீட்டை செய்யமுடியாதென்ற தெளிவான முன் தீர்மானத்திற்கு அதிகாரிகள் வந்தனர். ஆனால் கைத்தொழிந் தொழிநுட்ப நிறுவகம்(ITI) திரவம் மற்றும் வாயு எண்ணெய் வகைகளை பரிசோதனை செய்ததுடன் அவை மிகுந்த ஊக்கத்தை தருவனவாகவும் அமைந்தன. எவ்வாறாகினும் இவ் இயந்திரத்தில் பொருத்தமான பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்படாததன் காரணமாக எவ்வித மேலதிக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.இவ் அரை வணிக ரீதியான ஆலை மூலம் வருடத்திற்கு 750 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் கழிவுகளை எரிபொருளாக மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு முழுமையான வணிக ரீதியான இயந்திரம் நிறுவப்பட்டதன் பின்னர் 6,000 மெற்றிக் தொன்களாக விரிவாக்கம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2011 -2017ஆம் ஆண்டு வரை திரட்டு நிதியத்தின் கீழ் பெறப்பட்ட நிதி பற்றிய விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை 7.1ல் காட்டப்படுகின்றது.

அட்டவணை 7.1 பொலிப்டோ லங்கா (பிரைவேட்) லிமிடெட் பெற்றுள்ள நிதிகள்

| ஆண்டு | பெறுமதி ரூ.மில்லியன் |
|---|---|
| 2011 | 17.2 |
| 2012 | 38.2 |
| 2013 | 20.0 |
| 2014 | 50.0 |
| 2015 | 50.0 |
| 2016 | 55.0 |
| 2017 | 29.25 |
| மொத்தம் | 259.65 |

2015.09.03ம் திகதி அரை (semi) வணிக ரீதியான இயந்திரம் செயற்பாட்டு ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.இவ் இயந்திரம் இலங்கைக் கண்டுபிடிப்பாளர்களால் உருவாக்கப்பட்டதாகும்.உள்நாட்டில் இவ் இயந்திரம் 31 உதிரிப்பாகங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.இவ் இயந்திரத்தைப் போன்று உலகில் இன்னுமொரு இந்திரம் அடையாளம் காணப்படவில்லை. இவ் இயந்திரம் செயற்பாட்டு நிலைக்கு வருவதற்கு முன்னர் இவ் இயந்திரத்தில் உள்ள ஒவ்வொரு 31 உதிரிப்பாகங்களும் கவனமான முறையில் பரிசோதிக்கப்பட்டுள்ளது.மேலும் இவ் உதிரிப்பாகங்களுடன் கூடிய இயந்திரம் இறைவரை உலகத்தில் காணப்படவில்லை.

இவ் இயந்திரம் செயற்பாட்டு நிலையில் உள்ளபோது செயற்பாட்டு ரீதியாக எழும் பிரச்சினைகளை தீர்க்கக்கூடியதாக இவ் இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் 47,215 லீற்றர் எரிபொருள்

விற்பனை செய்யப்பட்டு ரூ.1,891,540 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.பிளாஸ்டிக் கலவைப் பகுதியில் செயற்திறனை அதிகரிக்குமுகமாக புதிய பம்பியொன்று மாற்றீடு செய்யப்பட்டுள்ளதுடன் கழிவு வெளியேற்றும் முறைமை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.மேலும் பொலிப்டோ லங்காவின் களஞ்சியத்திறன் 93,230லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 41,000 லீற்றர் களஞ்சிய சாலையில் விற்பனைக்காக உள்ளது. அத்துடன் பதிலீட்டு எரிபொருள் சந்தையில் குறைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந் நிலமையினை தோற்கடிக்க வேண்டுமெனில் இவ் எரிபொருளை உபயோகித்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.டீசல் இயந்திரம் ஏற்கனவே நிறுவப்பட்டு சக்தி வளத்தை உற்பத்தி செய்யமுடியுமென பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.இதனை மேலும் உறுதி செய்யுமுகமாக ஹொரணையில் சக்தி வலு நிலையத்தில் 150kwh திறன் கொண்ட மின்பிறப்பாக்கி ஆய்வு நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்டுள்ளது.

மேலும், கௌரவ. பேற்றோலியத் தொழிற்துறை அமைச்சர் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து 2017.06.07ம் திகதி இந் நிறுவன இயந்திரங்களை பார்வையிட்டுள்ளனர். சுற்றாடலுக்கு அதிக தாக்கத்தைச் செலுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சுற்றாடலில் இருந்து குறைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு தற்போதய இத் திட்டத்திற்கு மேலதிக நிதியீட்டம் செய்து தொடர்தும் இதனை எவ்வாறு இலாப நோக்கில் கொண்டு செல்வதென்று குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.இந்த வகையில் அரசிற்கு எவ்விதத்திலும் தாக்கம் ஏற்படாத வகையில் அரசின் குறைந்த மேற்பார்வையின் கீழ் பெலிப்டோ லங்கா தனியார் நிறுவனத்தை மறுசீரமைப்பது மற்றும் ஆலை கண்டுபிடிப்பாளரான திரு. ஆனந்த விதானகேயிடம் இந் நிறுவனத்தை கையளிப்பது தொடர்பாகவும் மேலும் இதில் கலந்துரையாடப்பட்டது. 2018ம் ஆண்டு முதலாவது காலாண்டில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சால் இம் மறுசீரமைப்புத் திட்டம் அமுல்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# 8. உள்நாட்டுச் சந்தை விலை நகர்வுகள்

எரிபொருள் விலையினை கருத்தில் கொள்ளும்போது இலங்கையில் பல தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில வேளைகளில் ஒரே ஆண்டில் ஒன்றுக்கு மேற்பட்ட முறை திருத்தங்கள் நடைபெற்றுள்ளதை தெளிவாக காணக் கூடியதாக உள்ளது. 31ம் திகதி டிசம்பர் 2005ம் ஆண்டிலிருந்து தற்போது வரையான பெற்றோலியப் பொருட்களின் சில்லறை விற்பனை விலைகளை அட்டவணை 8.1 உம் வரைபடம் 8.1 மூன்று பிரதான பெற்றோலியப் பொருட்களின் விலை திருத்தங்களின் போக்கினையும் காட்டுகின்றது. அவையாவன பெற்றோல்92 ஒக்டேன், ஓட்டோ, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகும்.


**அட்டவணை 8.1** பெற்றோலிய உற்பத்திகளுக்கான சில்லறை விற்பனை விலை - 31 டிசம்பர் 2005-2017 வரை (ரூ/லீற்றர்)

| ஆண்டு | உற்பத்தி வகைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 90 ஒக்டேன் பெற்றோல் (அ) | 95 ஒக்டேன் பெற்றோல் | ஓடோ டீசல் | ஓடோ டீசல் சுப்பர் டீசல (ஆ) | மண்ணெண்ணெய் | உலை எண்ணெய் 1000 Sec | உலை எண்ணெய் 1500 Sec | உலை எண்ணெய் 3500 Sec |
| 2005 | 80.00 | 83.00 | 50.00 | 55.30 | 30.50 | 31.40 | 30.30 | 26.00 |
| 2006 | 92.00 | 95.00 | 60.00 | 65.30 | 48.00 | 44.40 | 43.30 | 41.00 |
| 2007 | 117.00 | 120.00 | 75.00 | 80.00 | 68.00 | 52.70 | 51.70 | 46.65 |
| 2008 | 120.00 | 133.00 | 70.00 | 85.30 | 50.00 | 33.90 | 31.70 | 25.00 |
| 2009 | 115.00 | 133.00 | 73.00 | 88.30 | 51.00 | 34.90 | 32.70 | 26.00 |
| 2010 | 115.00 | 133.00 | 73.00 | 88.30 | 51.00 | 42.20 | 40.00 | 40.00 |
| 2011 | 137.00 | 155.00 | 84.00 | 106.30 | 71.00 | 52.20 | 50.00 | 50.00 |
| 2012 | 159.00 | 167.00 | 115.00 | 142.00 | 106.00 | 92.20 | 90.00 | 90.00 |
| 2013 | 162.00 | 170.00 | 121.00 | 145.00 | 106.00 | 92.20 | 90.00 | 90.00 |
| 2014 | 150.00 | 158.00 | 95.00 | 110.00 | 81.00 | 92.20 | 90.00 | 90.00 |
| 2015 | 117.00 | 128.00 | 95.00 | 110.00 | 49.00 | 82.20 | 80.00 | 80.00 |
| 2016 | 117.00 | 128.00 | 95.00 | 110.00 | 49.00 | - | 80.00 | 80.00 |
| 2017 | 117.00 | 128.00 | 95.00 | 110.00 | 44.00 | - | 80.00 | 80.00 |

குறிப்பு: (அ) 90 ஒக்டேன் பெற்றோலுக்கு பதிலாக பெற்றோல் 92 ஒக்டேன் 1 ஜனவரி 2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும்

(ஆ) 22 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சுப்பர் டீசலுக்குப் பதிலாக இலங்கை சுப்பர் டீசல் நான்கு ஸ்டார் (10ppm) ஆகஸ்ட் 22ம் திகதி 2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**வரைபு 8.1** பெற்றோலிய உற்பத்திகளுக்கான சில்லறை விற்பனை விலை 31 டிசம்பர் 2005–2017



அட்டவணை 8.2 சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கான மாதாந்த பிளட் விலை – 2017

| மாதம் | 90 ஒக்டேன் பெற்றோல் | | | 95 ஒக்டேன் பெற்றோல் | | | ஓடோ டீசல் | | | சுப்பர் டீசல் | | | மண்ணெண்ணெய் | | | நாணய மாற்று வீதம் US $ 1= ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | US $ பரல் | ரூ./பரல் | ரூ../ லீற்றர் | US $ பரல் | ரூ./பரல் | ரூ../ லீற்றர் | US $ பரல் | ரூ./பரல் | ரூ../ லீற்றர் | US $ பரல் | ரூ./பரல் | ரூ../ லீற்றர் | US $ பரல் | ரூ./பரல் | ரூ./ லீற்றர் | |
| ஜனவரி | 66.78 | 10,144.22 | 63.84 | 69.50 | 10,558.20 | 66.45 | 65.14 | 9,896.52 | 62.28 | 66.02 | 10,030.21 | 63.12 | 65.15 | 9,896.68 | 62.28 | 151.92 |
| பெப்ரவரி. | 67.57 | 10,327.51 | 64.99 | 69.91 | 10,686.08 | 67.25 | 66.76 | 10,204.62 | 64.22 | 67.42 | 10,304.43 | 64.85 | 66.26 | 10,126.97 | 63.73 | 152.85 |
| மார்ச் | 61.94 | 9,517.94 | 59.90 | 64.28 | 9,877.90 | 62.16 | 62.94 | 9,671.93 | 60.87 | 63.14 | 9,701.33 | 61.05 | 61.92 | 9,513.93 | 59.87 | 153.66 |
| ஏப்ரல் | 64.81 | 9,986.53 | 62.85 | 67.65 | 10,423.67 | 65.60 | 64.69 | 9,968.53 | 62.73 | 65.02 | 10,019.06 | 63.05 | 63.88 | 9,843.71 | 61.95 | 154.09 |
| மே | 61.67 | 9,521.19 | 59.92 | 64.46 | 9,950.73 | 62.62 | 61.19 | 9,446.35 | 59.45 | 61.81 | 9,541.70 | 60.05 | 60.81 | 9,387.76 | 59.08 | 154.38 |
| ஜூன் | 57.41 | 8,884.98 | 55.92 | 59.84 | 9,260.92 | 58.28 | 57.55 | 8,906.87 | 56.05 | 58.38 | 9,035.77 | 56.86 | 57.04 | 8,828.38 | 55.56 | 154.77 |
| ஜூலை | 59.04 | 9,175.93 | 57.75 | 61.75 | 9,596.58 | 60.39 | 61.05 | 9,487.57 | 59.71 | 61.49 | 9,556.32 | 60.14 | 59.77 | 9,288.35 | 58.45 | 155.41 |
| ஆகஸ்ட். | 64.77 | 10,037.08 | 63.17 | 67.53 | 10,463.43 | 65.85 | 63.61 | 9,857.34 | 62.03 | 64.40 | 9,979.46 | 62.80 | 63.19 | 9,791.00 | 61.62 | 154.95 |
| செப்ரெம்பர் | 67.58 | 10,453.03 | 65.78 | 70.53 | 10,909.32 | 68.66 | 68.48 | 10,591.85 | 66.66 | 69.34 | 10,724.48 | 67.49 | 68.03 | 10,522.56 | 66.22 | 154.67 |
| ஒக்டோபர் | 67.43 | 10,473.51 | 65.91 | 70.16 | 10,896.28 | 68.57 | 68.65 | 10,662.45 | 67.10 | 70.27 | 10,913.99 | 68.68 | 68.36 | 10,616.71 | 66.81 | 155.32 |
| நவம்பர் | 73.08 | 11,357.17 | 71.47 | 75.67 | 11,759.67 | 74.01 | 73.15 | 11,367.56 | 71.54 | 74.06 | 11,508.83 | 72.43 | 74.04 | 11,505.80 | 72.41 | 155.41 |
| டிசம்பர் | 73.36 | 11,366.26 | 71.53 | 75.37 | 11,677.47 | 73.49 | 75.31 | 11,669.02 | 73.44 | 75.89 | 11,758.66 | 74.00 | 75.45 | 11,691.10 | 73.58 | 154.95 |
